[illegible]

V2. NO. 24 13 Jun 1929

JL
211, N28K11
N29.2.24.
189059

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 ஞு ஜூன் மீ 13உ [No. 24.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 461
2. வில்லி பாரத விளக்கம் — T. S. நடராஜ பிள்ளை B.A, B.L. 463
3. மாறன் பாப் பாவினம் (K. நாராயண ரெட்டிகாரு அனுப்பிய பிரதி) 464
4. மரகதத் இளவரசன் (A Novel) — T. N. சேஷாசலம் B.A., B.L. 467
5. தமிழ்ப் பாடம் 469
6. பட்டினத்துப்பிள்ளையார் — T. R. இராஜகோபால் 471
7. குலசேகரர் — T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 473
8. அப்பர் — E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 475
9. கம்பராமாயணம் — T. N. சேஷாசலம் B. A, B. L. 477
10 வர்த்தமானம் 479

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்

சொற்றொடர் ஆரவாரம்

III

நுண்ணறிவினால் உலகத்தின் உண்மையை உய்த்துணரவல்லதொரு கல்விப்பயிற்சி யுடையோர் தம் நல்லுரைகளே மெய்யுரைகளென்று இவ்வரிசைத் தலையங்கங்களின் முதற்கட்டுரையின்கண் காட்டினோம். அன்னவர் பெயர்களைமாத்திரம் நம்முடைய பெருமைக்காதாரமாய் எடுத்தெடுத்துமிகைபடப் பேசுவது இரண்டகச் செய்கையென்று கருதப்படாமலிருக்க வேண்டுமாயின், அத்தகைய பெருமைக்குப் பாத்திரமாயிருக்கின்ற மேன்மையோர்களது பேர் மட்டுமேயன்றி அவர்கள் இயம்பியுள உயரிய வாசகங்களையும் கற்கவேண்டும்; கற்றவழி நிற்றலும் வேண்டும். மாதர்களது முன்னேற்றத்தைப் பற்றிப் பொதுச்சபையொன்றில் பேசுங்கால் ஓர் அம்மையார், "நம் நாட்டு மாதர்கள் முன்காலத்தில் மிகவும் 'முன்னேற்றம்' அடைந்திருந்தனர்; ஔவையார் பெண்தானே, மணிமேகலையும் ஒரு பெண்தானே; அவர்கள் எவ்வளவு அருமையான நூல்களை எழுதி யிருக்கின்றனர்!" என்று அவையிருந்தோர்க்கு ஊக்கம் உண்டாக்க முயன்றனர். 'மணிமேகலை' என்பது நூலின் பெயரென்றும் அதனை ஆக்கியோர் சாத்தனார் என்றும் அவ்வம்மையார் அறியாததால் அவருக்கு வேறெவ்வறிவும் இருக்க இயலாதென்று நாம் கூற வரவில்லை. எவ்வெவர்மாட்டும் அவ்வவர் நிலைக்குத் தக்கபடி அறியாமை யிருக்கலாம்; இத்தகைய பிழைகளும் நேரலாம். ஆயினும், பிரசங்கங்களினிடை உபயோகப்படுத்துவதற்கு இரண்டொரு பேர்வரிசைகள் தெரிந்திருந்தால் போதும் என்று எண்ணி விவகரிக்கின்ற மனப்பான்மைக்கு இதனை உதாரணமாகக் காட்டினோமேயன்றி வேறன்று. மேலும், "மணிமேகலை"யை நூலென்றுணராமல் அதனை ஆக்கியோராக நினைத்துப் பேசிய இது, பேர்களைமாத்திரம் வழங்குகின்றவோர் ஆர்வத்திற்கு உதாரணமாவதுடன், நம்முடைய கட்டுரைக்கு இன்னொரு உதவியையும் புரிகின்றது. மணிமேகலை என்ற சொல்லை எவ்விடத்திலோ கேட்டிருக்கின்றார் இவ்வம்மையார். கேட்ட அதைச் சிறிதும் ஆராய்தலின்றி, மற்றவர்க்கு எடுத்துரைக்கு முன் அம் மணிமேகலையின் திறத்தைத் தானே ஓரளவு கற்றறிய வேண்டுமென்ற நினைவு மில்லாமல், பேசத் துணிந்தனர். இதனைத்தான் நாம் சொற்களின் ஆரவாரம் என்று இங்குக் குறிக்கின்றோம். இப்படி ஒரு விஷயத்தை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற நினைவுகூட இல்லாமல் பேச முன்வந்தவர், உரைக்

கின்ற மற்றவைகளும் அவ்வாறே, 'ஆராய்ந்துணரப் படாமல் கழறப் பெறுகின்றனவோ,' என்று ஐயுற இட மேற்படுகின்றது. விஷய அறிவிலும் ஆராய்ச்சியிலும், நுண்மையாலும் அகலத்தாலும் ஒருவர்க்கொருவர் வேறுபடலாம். ஒருவர் ஆராய்ச்சியால் அடைந்த முடிவும் மற்றொருவர் செய்த ஆராய்ச்சியால் செய்த முடிவும் சிற்சில சமயம் எல்லாப் பாகங்களிலும் பொருந்தியே தீரவேண்டும் என்ற நியதியுமில்லை. ஆனால், ஆராய்ச்சி என்பதே யில்லாமல் பேசப்படுகின்ற சொற்களை ஆதரிப்பது எங்ஙனம்! மணிமேகலை என்னும் பேரைத் தன்மதம் நிறுவுவதற்குதவியா யழைத்தது அவ்வாறு ஆராயாது பேசுவதற்கு அடையாளம். ஆராய்ச்சியின் குறைவினால் பிழைநேர்ந்ததெனின் வருந்தமாட்டோம். முற்றும் கற்றவர் ஒருவரும் இல்லை. ஆராயத் தலைப்படாமலே பேசும் துணிவைக் கண்டுதான் அஞ்சுகின்றோம். ஒருவர்பால் இவ்வகைச் சொல்லொன்று கேட்டவுடன் தாலீபுலாக நியாயம் நினைவிற்கு வந்து நிற்கின்றதே!

பெரும்பாலுமிப் பொதுஜன முன்னேற்றத்தின் பொருட்டுப் பலபடப்பேசும் நாவலர்களது சொற்களும்சொற்றொடர்களும் இம்'மணிமேகலையின்' இனத்தைச் சேர்ந்தவைகளாகவே முடியலாகின்றன வென்பது எமது சென்றவாரத் தலையங்கத்து ளடங்கிய விஷயமாம். இவ்விதம் வார்த்தைகளை வழங்குகின்றவர்களைத்தான் உள்ளொன்றும் வைத்திடாமல் புறமொன்று பேசுகின்றவர்கள் என்றழைத்தோம். அத்தகைய சொற்கள் செய்யுமோர் ஆரவாரந்தான், நாம் உருப்படவேண்டுமானால், அடங்கவேண்டுமென்று பேர்ட்ராண்ட் ரஸ்ஸெல் இயம்புகின்றனர். இச்சொற்றொடர்கள் நடமாடுவதால்நம்முடைய நல்வாழ்விற்கு எண்ணரிய இடையூறுகள் நேர்கின்றனவென்ற அவரது கருத்தை இனிச் சிறிது ஆராய்வோம்.

ஒருவனுடைய நல்வாழ்வென்பது புறத்தினின்று அவனுக்குள் புகுத்தவல்ல தொன்றன்று. அயலாரும் அவன் நாடும் அரசனும் நல்வாழ்வை நாட்டிவைக்குமென்பது வெற்றுரையே. தேவர்களோ சிறந்தவர், வானாட்டின் சிறந்த நாடில்லை; அதனை ஆளும் கடவுளைக் காட்டிலும் நல்ல அரசர் எங்குளர்! ஆயினும், கடவுளது ஆட்சியில், விண்ணுலகின்கண், தேவர்களோடு இருந்த ஒரு தேவன், நல்வாழ்வு வாழும் வகையற்றுப் பாழாகிப்போனதை, ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியர் ஒருவருக்கே அடுத்தபடி என்று கருதப்படும் ஜான் மில்டன் என்றபுலவர் தம் "சுவர்க்க நீக்கம்" (Paradise Lost) என்ற பெருங் காப்பியத்தில் மிக்க திறமையோடு காட்டியிருக்கின்றார். வெளியிலே இருக்கின்றது விடுவதலை, என்று எண்ணிய அத்தேவன்தான் பிறகு பிசாசு (Satan) ஆனது. முதன்முதல் இப்பிரபஞ்ச சரித்திரத்தில் விடுதலை அடையவேண்டுமென்ற முயற்சிகொண்டவன் அவன். அவனுக்காகவும் அவனது வஞ்சனைக்கு ஆளாகநேர்ந்த மற்றுஞ்சில தேவர்களுக்காகவுந்தான் நரகமென்றவொன்று சிருஷ்டிக்கப்பட்டது. அதன் முன் நரகம் இல்லை. இதனை எடுத்துக் காட்டிய அம் மில்டன் என்ற புலவர் தம் இளமையில், கொடுங்கோன் மன்னனைக் கொன்று குடிகளினுரிமையைக் காக்கவேண்டும் என்ற கொள்கைக்கு ஈடுபட்டுப் பெரிதும் விவகரித்தவர் என்பதும் நம் நினைவில் தோன்றும்போது, முதுமையில் அவர் எழுதிய இச் 'சுவர்க்க நீக்கம்' என்னுமிந் நூலின்கண் அமைந்த உண்மையைப் பின்னும் அருமையாகப் பாராட்ட வேண்டியவ ராவோம்.

ஆதலின், சுதந்திரம் சமத்துவம் சகோதரத்வம் போன்றவைகளும் அவைகளுக்குச் சார்பான வேறு சில நிலைமைகளும் நல்வாழ்விற்குரியனவேனும் அவைகள் புறத்திலிருந்து பெறத்தக்கன வல்ல என்பதை மறப்பது பெரு மோசம். நமது வாழ்வு உள்ளத்தினு டியன்றவொரு செய்தி. உள்ளத்திற் குரியவைகளைப் பற்றி வாழ்வாரை, உலகம் ஒன்றுபடவரினும் கெடுக்க இயலாது. பண்டைநாள் முனிவரரும் கவிவரரும் சமயாசாரியர்களும் தம்வாயார விளம்பித்தந்ததும் உயிர்நிலையாகிய இவ்வுண்மையே யாகும். இன்றைக்கு இரவீந்திரநாதரும் அரவிந்தரும் அன்பின் பெருக்கினால் நமக்கு இதனையே விளம்பிவருகின்றனர். அவருடைய பொருளுரைகளின்படி உள்ளத்தில் ஊறி உலகத்தில் பரவுகின்ற வாழ்வை எய்தியவர் மாத்திரமே உய்ந்தவர்; எய்துதற்கு உரைப்பவரும் உதவுவாருந் தான் உய்விப்பவர். காவியம் அனைய கலைகள்தான் இதற்கு உதவும் என்று இரவீந்திரரும் அரவிந்தரும் உரைப்பதை இவ்விதழ்களில் நாம் பலகால் எடுத்துக் காட்டியிருக்கின்றோம்.

இன்ன தன்மையராய மேன்மையோர் உரைப்பனவன்றி, ஒவ்வொருவர் உள்ளமும் அவரவரைப் புறப்பொருள் மயக்கங்களினின்று தெளிந்து தன்னுள் அடங்குகின்ற செவ்வியால் எங்கும் வியாபிக்கவல்ல வாழ்வில் அமருமாறு இடையிடையே அழைத்துக்கொண்டு மிருக்கின்றது. நமது உள்ளத்தின் வேண்டுகோளிற் குடன்படாமலும் மெய்யின் திறமுணர்ந்த தூய்மையோர் உரைகளுக்குச் செவிகொடாமலும் இடைநின்று தடுப்பன இந்நாள் புறம்புக்கு ஆரவாரஞ் செய்யும் சொற்றொடர்களாதலால் அவைகள் அஞ்சப்படும். கடவுளுக்கு நம்மிடையே வந்துலவவழி வேண்டுமென்றார் காந்தியடிகள் ஒருநாள். அதனை முன்னொரிடத்தில் விளக்கியுள்ளோம். அவ்வழியைக் குறுக்கே கிடந்து மறிக்கின்றன புறத்தில் அடர்ந்து முழங்கமுழங்க இந்நாள் வழங்கப்பெறும் சொற்கள் பல. நல்லன சிலபோது நினைப்பதற்கிவ் வாரவாரத்தினிடையே நேரமில்லாமற் போகின்றது. கடவுளது திவ்விய மெல்லிய தூமொழிகள் கேளாவண்ணம் நம் செவிகள் தூர்ந்து கிடக்கின்றன. அரவிந்தர் போன்றவர்களது நயமொழிகள் கடலோசையுள் குயிலொலி என்னக் குழைந்தழிகின்றது. உள்ளத்தினின்று நம் வாழ்க்கையை உருப்படுத்தவேண்டும் என்ற எண்ணங்கூட எய்த இயலாமல் இச்சொற்களென்னும் சாட்டையிற் பம்பரம்போல் சுழல்கின்றோம். அவ்வெண்ணம் உதிப்பதற்கு ஆதாரமாயிருக்கின்ற கலைகளிற் பயில வசதியில்லை. எடுப்பார்கைப் பிள்ளையா யிருத்தல் பேதைமை என்று நினைத்து, உதைப்பார் கால் ஊழியர்க ளாகின்றோம். தெருளாதார் உரை எல்லாம் பொருளாகா வென்பது உணராமல் வாழ்க்கையின் பண்பையும் பயனையும் விற்று, எஞ்சி நின்ற உயிரிற்கும் விலைகூறி ஓட்டுச்சீட்டை வாங்கும்படி நம்மைத் தூண்டுவதற்குக் காரணம், பெரும்பான்மை உள்ளொன்று வைக்காதார் வழங்குமிவ் வார்த்தைகள்

செய்துவரும் ஆரவாரமேஎனத் தேர்தலருமையன்று. ஆதலாற்றான் பேர்ட்ராண்ட் ரஸ்ஸெல், இச்சொற்றொடர்கள் நம்மை அண்டாமல், முதலில் அவைகளை வெளித்தள்ளித் தாழ்கோல் இடவேண்டியது, நம்முடைய உள்ளத்தின் வாழ்க்கை உருக்கொண்டு பெருகுவதற்கு மிகவும் அவசியமான காரியம் என்று கூறினார்.

கம்பர் பிறந்தநாடாக இது இருந்தது போதும்; கம்பரைப் படிக்கும் நாடாக மாறவேண்டும். திருக்குறளை அயல்பாஷைகளில் மொழிபெயர்த்திருக்கின்றதால் நமக்கு எய்திய பெருமை போதும்; அந்நூலைத் தமிழில் நாம் படிக்கின்ற திறமையும் பயனும் வேண்டும். ஆரம்பக்கல்வி உயர்தரக்கல்வி பெண்கல்வி ஆண்கல்வி இவைகளின் அவசியங்களைப்பற்றி நாம் கேட்டதெல்லாம் போதும்; கற்றதனால் ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவதன்றி வேறில்லை என்று தேர்வதற்கு அவகாசம் வேண்டும். சுதந்திரம் பெறுவதற்கு முயல்வதுபோதும்; அதனை ஒருவரும் இழந்திருக்கவில்லை என்றஉண்மையையே உணர்தல் வேண்டும். சமத்துவத்திற்கு மன்றாடும் சச்சரவு போதும்; வேற்றுமை இல்லையென்ற வேதாந்தம்வேண்டும். வர்த்தக வளர்ச்சி போதும்; ஆன்மாவை விற்காதிருக்க வேண்டும். பண்டைநாள் இந்தியநாகரிகத்தின் பெருமையைப்பற்றி நாம் கேட்டிருப்பது போதும்; இற்றைநாள் நாகரிகத்திற்கு அங்காந்து நிற்காமலிருக்கவேண்டும். இருக்கின்ற செல்வம் போதும்; உள்ளி உள்ளவெல்லாம் உவந்தீயும் வள்ளியோர் ஆதலே வேண்டும்.

நலமல பலபட முழங்குவனபோதும்; சொல்லரிய நெறியை யொரு சொல்லாலுணர்த்துமச் சின்மையானந்த குருவினது உபதேசத்திற்கு நாம் பாத்திரர்களாக முயல்தல் முதலிலே வேண்டும்.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

[449 பக்கத் தொடர்ச்சி]

காண்டவ தகனச் சருக்கம்.

வில்லும் அம்பும் கொண்ட வீரன், அனங்கன் தான்
செய்யும் போரினில் தனக்கு வெற்றியுண்டாக
வேள்வி செய்யலுற்றான்.

செங்காவி செங்கமலஞ் சேதாம்ப றடந்தொறுமுத்
தீக்க ளாகப்
பைங்காவி னெடுஞ்சினைக்கை மலர்நறுந்தே
னாகுதிகள் பலவும் வீழ்க்க
வுங்கார மதுகரங்க ளோங்காரச் சுருதியெடுத்
தோத வேள்வி
வெங்காம னிரதியுடன் புரிந்துதன தென்றலந்தேர்
மேற்கொண் டானே.

[செங்குவளை, செந்தாமரை, செவ்வாம்பல் ஆகிய பூக்களை யாகத்திற்கென்று சொல்லப்படும் மூன்று தீக்களாகவும், பசுமையான சோலைகளிலுள்ள நீண்ட கிளைகளாகிய கைகள் மலரிலுள்ள மணம்பொருந்திய தேனையே ஆகுதிகளாகச் சொரியவும், ரீங்காரஞ் செய்யும் வண்டுகள் ஓங்கார ஒலிக்குறிப்பையுடைய வேதத்தைச சொல்லவும், உருவிலி தன் மனைவியான இரதியுடன் வேள்வியைப் புரிந்து தென்றலாகிய தேரின்மேலேறினான்]

வேதாக்கினி என்றுரைக்கும் வேள்வித்தீ மூவகைப்படும். அவையாவன: ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி. தடாகமே ஓமகுண்டமாக, அத் தடாகத்தில் பிறக்கும் செங் காவிமுதலிய செம்மை நிறமுள்ள அரும்புகளே வேள்விக்குரிய மூன்று தீக்களாகவும் உருவகப் படுத்தப்பட்டன. செங்கமல மொக்குகளே விளக்காக நிற்க, இரவில் அலவன் தன் தனமான கிளிஞ்சலை அளையாநிற்கும் என்றார் ஒரு கவி. ஓமகுண்டமும் தீயு மேற்பட அத்தீயிற் சொரியும் அவிசாக மலரிலுள்ள தேன் கூறப்பட்டது. மரங்களின்கிளைகள் தேனைச்சொரியும் கைகளாயமைந்தன. இவ்வாறு ஓமகுண்டத்தில் தீமூட்டி அவிசொரிந்து நிற்ப நாற்புறமும் வண்டுளே அந்தணராய் வேதமோதி நின்றன. அவைகளினுடைய ஓம்என்ற ஒலிக்குறியே ஓங்காரச் சுருதியோசை யாயிற்று. ஓங்காரச் சுருதியென்பதற்குப் பிரணவத்தைத் தெரிவிக்கும் மறையென்றாவது, ஒருவகை ஒலிக்குறிப்போடு ஓதப்படும் சுருதி யென்றாவது கொள்ளலாம். இவ்வாறு தனது மனைவியொடு சேர்ந்து வேள்விசெய்து முடித்த பின்னர், இரதிகேள்வன் தென்றலாகிய தனது தேர் மேற்கொண்டு ஊர்வலம் வந்தானும். வேள்விசெய்து முடித்தபின், இவ்வாறு ஊர்வலம் வருதல் அக்காலத்தில் மரபா யிருந்ததாம். வடமொழியில் மிகவும் பயிற்சிபெற்ற நமது ஆசிரியர், இச்சமயம் அதில்தான் கற்றவற்றையும், நேரிற்கண்டு தெளிந்தவற்றையும், வாசிப்போர் உள்ளமே பள்ள மடையெனப் பொழிகின்றார்.

இளவேனி லுற்றதென நாடெங்கும் பறையறைந்து அதைத் திருவிழாவெனக் கொண்டாடத் திருமாலும் தனஞ்சயனும் தத்தம் தேவிமாருடன் ஒரு பொழிலிற் சேர்ந்தார்கள். ஊர் முழுவதும் அவ்வாறே இளவேனில் விழாவயரத் துவக்கியது. ஒவ்வொரு சூழலின்கண்ணும் ஆடவரும் மகளிரும் சூழ்ந்துநிற்ப யாவரும் களியாட் டயர்வான் தொடங்கினர். அச்சமயம் ஓர் புதுமை நிகழ்ந்தது. அஃதென்னையோவெனில், அது வேனில், கார் காலமாய் மாறியதே! இப்புதுமைதனைக் கவி பின்வருமா றெடுத்துரைக்கின்றார்.

கொண்டலெழ மின்னுடங்கக் கொடுஞ்சாபம்
வளைவுறச்செங் கோபந் தோன்ற
வண்டளவு நறுங்குமிழும் வண்டணிகாந்
தளுமலர மலைக டோறுந்
தண்டரள வருவிவிழத் தையலார்
வடிவுதொறுஞ் சாயற் றோகை
கண்டுநயக் கிளவேனிற் கார்கால
மானதெனக் களிக்கு மாலோ.

[மேகமெழவும், மின்னல் துவளவும், கொடியவில்லானது வளையவும், இந்திரகோபம் தோன்றவும், வண்டுகள் மொய்க்கும் காந்தளும் மலரவும், மலைகளெல்லாம் குளிர்ச்சியான முத்துப்போன்ற அருவிகள் விழவும், மாதர் வடிவைக் கண்டு அழகிய மயிலானது தனக்கு இளவேனிற்காலம், கார்காலம் ஆனது என்று சந்தோஷிக்கும்.]

எங்கும் பெண்கள் நிறைந்திருப்பதனால் அவர்களுடைய கூந்தலே மேகமெனவும், அவர்க ளிடையே மின்னற் கொடி யெனவும், அவர்கள் புருவமே வானவில்லெனவும், அவர்களது இதழ்களே இந்திரகோபமெனும் தம்பலப் பூச்சிகளென்றும், அவர்கள் கொப்பூழ் குமிழெனவும், வளையலணிந்த கைகள் வண்டுமொய்க்கும் காந்தளெனவும், அவர்களது தடமுலைகளே மலைகளெனவும், அதன்மே லணிந்துள்ள முத்துவடமே அருவியெனவும், மயங்கி இக்குறிகளால் கார்

காலம் வந்துவிட்டதென மயில்கள் குனிக்கும். இச் செய்யுள் மயக்கவணி யென்பர். இக்கவியை வில்லி புத்தூரார் வெகு அழகாய்ச் சமைத்துள்ளார் என்பதற்கு ஐயமில்லை. மாதர் உறுப்புக்களைத் தனித்தனியெடுத்துக் கார்காலத்திற்குரியவைகளை அதனதன் உவமைபாற் சேர்த்துச் சொல்லியிருப்பது மகிழ்ச்சியோடு நாம் அங்கீகரிக்க வேண்டியதாயிருக்கின்றது. கொடுஞ்சாபம் வளைவுறலால் வானவில்தோன்ற என்றும், செங்கோபம் என்பதற்குத் தம்பலப்பூச்சி என்றும் இங்குக்கொண்டோம். இனித் தங்கள் கோபம் தோன்றப் புருவம்வளைதலால் அது வானவில்லைப்பொத்திருந்தது என்றும் கொள்ளலாம். வண்டணிநாங்கள் என்னுமிடத்தில் வண்டு என்பது வளையலைக் குறித்து நிற்கின்றது.

இவ்வாறுகூடிய மாதர்கூட்டம் பொழில்விளையாட்டிலமர்ந்தது. வழக்கம்போல் வனிதையர் மலர்கொய்யச் சென்றனர். ஆயின், அவர் உத்தம இலக்கணங்கள் வாய்ந்த அணங்கனர் ஆனபடியால்,

> பாராமன கையாமற் பாடாம லாடாமற்
> பாதஞ் செங்கை
> சேராமன் முகராகம் வழங்காம லிகழாமற்
> செவ்வா யூறல்
> நேராம னிழலதனை நிகழ்த்தாமன் மலர்ந்தழகு
> நிறைந்த நீழ
> லாராமந் தொறுந்தங்க ளவயவம்போல்
> வனகொய்தா ரணங்கு போல்வார்.

[உற்றுப்பாராமலும், நகைக்காமலும், பாடாமலும், ஆடாமலும், உதையாமலும், அணையாமலும், நட்புறாமலும், இகழாமலும், சுவைக்காமலும், தங்கள் நிழலை யளிக்காமலும் இயற்கையால் மலர்ந்து அழகு நிறைந்துள்ள நிழலடர்ந்த சோலைகடோறுந் தங்க ளவயவம்போல் மிருதுவான தளிர்களையும் மலர்களையும் கொய்தார்கள், தெய்வப்பெண்கள் போன்ற அம்மாதர்கள்]

நமது இந்தியமரபில் சிலமரங்கள் தெரிவையர்செய்கையால்மலர்வனவென்றுசொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வாறு மாதர் பார்க்க மாவும், நகைக்க முல்லையும், பாடக் குருக்கத்தியும், ஆடப் புன்னையும், உதைக்க அசோகும், அணைக்கக் குராவும், நட்புறப் பாலையும், இகழப் பாதிரியும், சுவைக்க மகிழும், நிழலளிக்கச் சண்பகமும் மலர்வனவாம். தற்காலத்தில் ஸர் ஜே. சி. போஸ் என்னும் வங்காளச் சீமான், தாவர தத்துவத்தில் நிபுணர், ஆங்கில நாடுமுழுமையும் சிறந்த பெயர் வாய்ந்தவர், சொல்வது உண்மையேல், மரமும் செடியும் உயிருள்ளனவையா யிருக்கின்றனவாம். அவைகள் சுவாசம் விடுவதும், உண்பதும் உண்டென்றும் அவைகளுக்கு இரத்தக் குழாய்களும் இரத்தாசயமும் (இருதயமும்) உண்டென்றும், அவரால் நிரூபிக்கப்பட்டுப் பல ஆங்கிலேயர்களாலும் உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் உயிரும் உணர்ச்சியும் உள்ள இவைகளில் எந்த மரத்திற்கு மிகுந்த நல்லுணர்ச்சி யுண்டென்று நிர்மாணிப்பது அரிதாயிருக்கிறது. புன்னையும் குருக்கத்தியும் தையலார் ஆடல் பாடல்களுக்கு இரங்குகின்றன. குராவும் மகிழும் சற்றே முதிர்ந்த உணர்ச்சியுடையனவாய்த் தோன்றுகின்றன. பாதிரி இகழ அலருமேல், அரிவையர் 'அடா' எனும் சொல்லை இன்சொல்லாக் கொள்ளும் அறிவுடையோர் குழுவைச் சேர்ந்தது போலும் அது. இவைகளில் கடைப்பட்டது அசோகு என எண்ணற்கிடமுண்டெனினும், உயர்ந்த இரசிகர்கள், வஞ்சியர் தாளிணையின் உதையே இன்பவீட்டிற்குத் தாள் திறக்கும் என்பார்களாதலால் அசோகு குறைபட்டதென்பதற்கில்லை.

மாறன் பாப் பாவினம்.

[447-வது பக்கத் தொடர்ச்சி]

கோச்சகக் கலிப்பா.

தரவு.

மலர்புரை யாணர் மையுண்கண் மொய்யிழா
யுலகிய லறிந்தோ ருசாத்துணை யுள்ளத்
தருமறை தமவேனுங் கருவிக ளடங்காச்சாக்
கிரத்தமர்த மகத்தவை யடங்கிய வேணைய
சொற்பனை சுழுத்தியிற் பராவலுந் துன்னுநர்க்
குற்பவ மாமுளத் தெனலுண் மையதாம்.

இஃதிரண்டாமடி யைஞ்சீரான் வந்த வாறடித் தரவு.

கொச்சகம்.

நினதூரன், (இது கூன்)
தளையவிழ் பல்பூத் ததையமெல் லணைமேல்
விளைவுறு வேட்கையின் விம்மித ளுகி
வளைமலி முன்கையை வாழ்த்துபு பற்றி
யிளையரில் யாமத் தினில்.

பூங்குழ லோர்கையிற் றுங்கினன் றுங்கலு
மீண்டிய மென்மை யினிமையிரா கங்கமழ்தல்
கூண்டு மழலை மிழற்றுங் குளிர்பவளம்
யாண்டெய் தினைநீ யெனும்.

வேரிக் களப மெழுகித் தாளவடம்
பாரித்த கொம்மை முலைநெருங்கப் பன்முறையும்
பூரித் தழுந்தப் புணர்மார் பிணைநோக்கி
யார்நிற் கிணையிங் கெனும்.

இவை மூன்றுங் கொச்சகம்.

சுரிதகம்.

வாய்ந்தமருந் தீன்ற மலர்மடந்தை நன்படிவ
மீந்தவர்தாம் யாரிங் கெனும்.

இது, வெள்ளைச் சுரிதக மிடைவந்தது.

கொச்சகம்.

கழுவா மணிக்குக் கவினுமுறப் பெல்லாம்
வழுவா தமைத்து மலர்தூவிக் கண்டார்
தொழுதா தரிக்கத் துளக்கமதுய்த் தாரீ
ரெழுபா ரினும்யா ரெனும்.

இயற்கை யுறுப்பி னெழிலணிகள் வேய்ந்தரா
முயற்சி மறைத்தருளி மூடமிஃ தென்னென்
றயர்த்தி யுறுகட் டுரையினுள மொன்றப்
பெயர்த்துந் தழுவிய பின்.

இவையுமோ ரிரண்டு கொச்சகம்.

அணியிழாய் (தனிச்சொல்)

பேரெண்.

இக்காலத் தாராக்கவவிஃ தென்னென் றுணரவெ
னக்காலத் தொன்றி யயர்வுற் றனன்மன்னே.

இது பேரெண்.

தாழிசை.

தோய்ந்த துயில்விட்டுத் துணுக்குற் றுணர்வுறலும்
ஆய்ந்ததட மென்றோ ளணைமேற் றுயில்கொள்வான்
ஆய்ந்ததட மென்றோ ளணைசேர் துயின்முகத்தாங்
கேந்திழைக் கென்னீர்க்கமிஃ தென்றுமென் றுமென் [றும்

ஆற்றுவா ராற்றற் கமைதருமந் நோயதனைப்
போற்றுவார் மாட்டென் புகழ்பழியென் பான்மன்னே
போற்றுவார் மாட்டென் புகழ்பழியென் றற்பிரித
றேற்றுவாய் நெஞ்சே யெனுமறைசிந் தித்தனனால்.

இவையிரண்டுந் தாழிசை.

பேரெண்.

சிந்திப் பதனெடுமிச் சிந்தை யறைபோக
வந்திப் பசலை மறைத்ததுமெய்ம் மாசுணவே.

இதுவும் பேரெண்.

கொச்சகம்.

ஏடீ யென்சொல்வேன் மன்யான்
பிரிவென்ன நீடிய வுள்ளத் தவர்க்கு.

இதுவுங் கொச்சகம்.

ஆயினும், (தனிச்சொல்.)

எனதுயி ரெனவுறு நினதுயி ருணர்வுற
மொழிவது மொன்றே பிரிவது பிரிபவ
ருடனென் காமுறு மனனே குமையினை
யுண்பது முறக்கமு மறக்குமென் னையரிக்
கண்கள தல்லான் மன்னே.
மெய்யென வுணர்ந் துணர்த் துகவீ
பொய்யென வுடலினை யுயிர்துறக் குமதே.

இதனுள், முதலடி முழுது முடுகியலாகவு மிரண்டாமடி யிருசீர் முடுகியலாகவு "மன்ன" என்பது, சொற்சீராகவும் வந்தன. இவ்வாறு வருவன கொச்சகக்கலிப்பாவெனப்படும். ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தாழிசை யாகிய வுறுப்பு மிக்குவந்தாற்போலக் கொச்சகக் கலிப்பாவிற்கும் வெண்பாவாகிய வுறுப்பு மிக்குவருமென்று கொள்க. இனி, யீண்டோதப்பட்ட வுறுப்புக்கள் மிக்குங் குறைந்து மயங்கியும் வருமவை கலித்தொகையுட் கண்டுகொள்க. இதற்குக் கூறிய தொல்காப்பியத்திற் சூத்திரம். "தாவும் போக்கும் பாட்டிடைமிடைந்து, மஞ்சீரடுக்கியு மாறுமெய் பெற்றும், வெண்பாவியலான் வெளிப்படத் தோன்றும்." "பாநிலைவகையே கொச்சகக் கலியென, நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே" என்னுஞ் சூத்திரத்தைத் தோன்றும் என்பதனளவுஞ் சூத்திரத்தினைவேறாக்கி யிதனைக் கலி வெண்பாவினு றுப்பின் வேறுபட்ட கொச்சகமென்று மொருசா ராசிரியர் கூறுவர். இது, தலைமகன் குறிப்புக் கண்டு பிரிவர்கொல்லென வையுற்றுச் செல்கின்ற தலைவியக்காலத்துத் தலைவன் கனவினரற்றல் கேட்டுப் பொருள் வையிற் பிரிகின்றானெனத் துணிந் தாற்றாளாய்த் தோழிக் குரைத்தது. 18.

அகநிலைக் கோச்சகக் கலிப்பா.

பஃறொடை வெண்பா.

முள்ளுடைத் தாட்டா மரைமலர் முன்னிய
பிள்ளைமை யெய்தாப் பிதாமக னாகிய
தெள்ளிய நான்முகத் தோதியுந் தேர்வரு
மொள்ளிய நான்மறை யோதா துணர்வினுட்
கொள்பவ னாகிக் கொழித்த தமிழ்மறை
புள்ளுயர் கேதனத் தார்க்கருள் பொன்மகிழ்த்தார்
வள்ள லுயர்துடரி வாய்.

நிலைமண்டில வாசிரியப்பா.

திருந்திய வெண்ணெண் கலைகளுந் தெற்றெனத்
தரும்பனு வலின்னுரை சார்ந்துணர் கேள்வி
பொருந்திய பழிபிறங் காவருட் புரவல.

இன்னிசை வெண்பா

நெய்த்து மிருண்டுஞ் சுருண்டு நெறித்தனவாய்
மொய்த்தகுழற் கோதி முடிமுச்சி - வைத்தமுகை
விண்டு மதுத்தூய்ச் சுவற்புரள்வ.........
துய்த்திங் கெழுதுவதொன் றோ *
இருட்பான்மை யின்றி யிருதிணை யைம்பாலுட்
பொருட்பான்மை முற்றப் பொறிப்பவ ரென்றாலு
மருட்பார்வை மையுண் மதரரிக்கண் செய்யு
மருட்பார்வை தீட்டுவதிங் கார்.

நிலைமண்டில வாசிரியப்பா.

காந்தளி தெனுமிணைக் கரங்களை யெழுதினு
மாய்ந்தணி வரிவளை யவையுரா யொலிப்பதுந்
தோய்ந்திட வெழுதவுந் துணிபவர் யாரே.

இன்னிசை வெண்பா.

வண்ண மணிக்கச்சின் வன்கட் டறவிம்மித்
தண்ணென்னும் வெச்சென்னுந் தன்மை புரிவனவாய்
வெண்ணித் திலவடங்கண் மீவரவும் பூண்முலைமேற்
பண்ணப் படுமோ பகர்.

நேரிசை வெண்பா.

உண்டிலையென் றைய முறுநுண் ணிடையுருவங்
கண்டெழுது வாரெவர்மென் காலுறினுந்-தொண்ட [மதுட்
கொண்டொசிதல் கூடும் படிக்குங் குறித்தெழுதும்
பண்டிதரிங் காருளர்நண் பா.

‡ நேரிசையாசிரியச் சுரிதகம்.

மறித்தினி யுரைப்பதென் மடவர லவையவ
நெறிப்பட நிகழ்த்திய படிநீ கிழியினிற்
செறித்துள தென்னிற் சீறார்
குறிக்கொளக் குழுவொடுங் கொடுபோ துகவே.

இது, அகநிலைக் கொச்சகக்கலிப்பா. என்னை? "பாநிலை வகையே கொச்சகக் கலியென, நூனவில்புலவர் நுவன்றறைந்தனரே" என்றாராகலின். இது; பகுதி—மடல், துறை—அவயவமெழுத வரியதெனவிலக்கல். "அகவினம் பாடுவாந் தோழி" என்னுங் குறிஞ்சியுட் கலியும் பா விது.19

உழற்கலி.

கதழ்பரி பூண்ட கடுந்தேர் கடாய
மதனுண்ட நோன்றாள் வலவ னினியற்
புதமிவ ணெய்தல் புதனழிந்தீர் போலுந்
ததமகிழ் மாறன் றிருக்குரு கூர்வா
ழிதமரு ளெங்கைய ரீதறி வின்பஞ்
சுதனுறுந் தேர்மீளத் தாண்டு
மடநல்லாய்
தவறென் றிழைபாத் தமியேனை யீன
விவற லுடையா யெனலாலிப் போழ்து
கவர்வுற் றதுநெஞ்ச கம்
புனலூர
பொய்யினைப்பொய் யாகப் புறம்போக்கி மேதக்க
மெய்யினைமெய் யாக்கும் விழுமியவா மாறுடுஞ்
செய்கைப் பொதுமகளிர்ச் சேர்ந்தாங் களவளாய்
மைய லுறுநின் மனைவாக்கும் வெண்பளிங்கா
யெய்திற்றென் சொல்வ தினி.

இன்சொல்லாய்

சொல்வன்மை யார்ந்து யவற்றவர் விற்றசொல்
வெல்வன்மை பாரா விளம்பு.

புரவலர் கேட்டி

நனிநீ ரவரு நகுதற் பொருட்டாய்த்
தொனிநீர் வளைமுன்கைத் தோதகங்கூர் மாதர்

* இச்செய்யுளைத் திருத்திப் பதிப்பித்தல் அருமையாயிருக்கின்றது.

† இங்கே, பலவாய், என்று மொழி யுளது.

OFFICE OF THE REG

முனிநீர்மை யாரக முள்ளுகிராற் செய்புண்
பனிநீர்பெய் சாந்தெழுதும் பண்பின் மறைத்துட்
கனிநீர் மையர்போலக் கையிருதாள் பற்றித்
தனிநீ குறையிரப்பத் தாழ்ந்ததுள நின்க
ணினிமேலென் செய்குவன் யான்.

இது, உறழ்கலி. என்னை? "கூற்று மாற்றமு மிடையிடை யிடைந்தும், போக்கின்றாத லுறழ்கலிக் கியல்பே" என் னும் விதியால் அஞ்சீரடுக்கியு மாறுமெய் பெற்றும் போக் கின்றி யிற்றவாறு கண்டுகொள்க. "அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்ச" மென்னு மருதக்கலியு மிது. 20

மயங்கிசைக் கொச்சகக் கலி.

தரவு.

அன்றினர் நிறத்துற
வழுத்துபு பறியா
வன்றிறன் மாரதர்
வலம்பட வேந்திய
கொழுங்குருதிப் புனன்முழுக்குண்
கூரிலைவே லிணைவென்றே
யழுங்கஞர்கூர் நமன்படைபோன்
றமர்புரிமை யுண்கணர்.

மந்தரவெற் பிணைபழித்து
வயிரமணிப் பருவரைபோற்
சுந்தரமொன் றியபைம்பூட்
டிணைத்தோளும் புனலூரன்
மின்றிகழ்தட் டொளியினுமான்
மிளிர்வெய்திக் கதிர்சுலாம்
பொன்றிணிமால் வரைமார்பும்
புணையாகப் பொதுவுண்பான்.

தாழிசை.

தண்ணறும்பூந் துணர்ப்பொதும்பர்த்
தமிழ்மலையத் தாவுமிழ்ந்த
வொண்மணியும் பசுங்கழைவிண்
டுகுமணியுங் கைக்கொண்டே.

வயிரவழற் பிழம்பெறிகண்
மால்யானை மதமாடி
வெயில்விரிபொன் னசும்பதனை
மெய்ம்முழுது மட்டித்தே.

பொறிவரிவண் டுளர்நறுமென்
பொதியவிழ்பூ நறவருந்தி
வெறிகமழ்சந் தகிலாகம்
வேர்முதல்கீண் டுருட்டியே.

மாங்கனியும் வாழையின
மாழையங்கனியும் வருக்கையின்மாண்
டீங்கனியு மெவ்வழியுந்
திசைதிசைபோய்த் திரைத்தெடுத்தே.

முதுமொழிவான் பொருட்டிறங்கண்
முழுவதூஉ முதுக்குறைவாற்
பொதுவறவுட் கொண்டவரிற்
பொருண்முழுதுங் கவர்ந்துராய்.

நெடும்புயலின் னுகுதுவலை
நிலத்துறுமுன் னெதிர்கதுவிச்
சுடுஞ்சுரந்தண் மருதமெனத்
தோன்றுதற்கா யிடையடைந்தே.

இவையாறு மீரடித் தாழிசை.

அராகம்.

புறவு பருந்தோ டெருவை வெருண்டு
புறலிய பம்பு தொழுதி வழங்கவே.
உலவை முளிந்த குடச முழிஞ்சி
லிலகு கடம்பு குரவை நெருங்கியே.
இரலை மருண்ட பிணையொ டிரங்க
வருண நிறங்கொண் ஞமலிய வுந்தியே.
உலைவில் குறும்பி னெயினர் கணஞ்செ
யிலையெய் குரம்பை யுழுது பெயர்த்திடர்.

இவைநாலு மராகம்.

தாழிசை.

குல்லையுந்தே னிமிர்கொழும்பொற்
கொன்றையுந்தண் காயாவு
முல்லையுந்தோன் றியதுவன்றமுல்லையு
ளொல்லையிற் படர்ந்தே.

ஆம்பலந்தீங் குழற்குடவா
கன்பாடித் தொழுவுனூட
மோம்படைமூ வினமொன்றிற்
கொன்றலக்கற் றிரியவே.

குடப்பால்வெண் டயிர்விராய்க் குளிர்புனற்
கங்கையைப் பழித்துக்
கடற்பாலின் வளமலிந்து
கவின்மருதங் குறுகியே.

கருமேகந் தொடுசிகரக்
கருவரையும் பொருவலவென்
றிருமேரு வெனப்பணைத்த
விருகரையி னெடும்பொருதே.

சுடுமணுற படுத்திழுகு
சுதைவழித்த மடைமுழைபுக்
கிடுமணுறு குழவிணைவென்
றெழிலியெனக் குளிறியே.

ஊதியங்கொள் வதற்குளதோன்
றுதவினர்தம் முதவியைவென்
றீதலியல் பறிந்தோரி
னெழின்மணியேற் பவர்க்குய்த்தே.

இவையு மோராறு மீரடித் தாழிசை.

எனவாங்கு (தனிச்சொல்)

சிற்றெண்.

வண்டானந் துணைபிரிய.
அன்றிலுந்தன் றுணைபிரிய.
தண்டாத வனமிரிய.
தடஞ் சிறைப்புள் ளினமிரிய.
பொய்கைதொறும் பரந்தே.
பொழில்கடொறும் பரந்தே.
செய்கடொறும் பரந்தே.
திரள்கரும்பிற் பரந்தே.

இவையெட்டு மிருசீ ரோரடிச் சிற்றெண்.

பரந்த, (தனிச்சொலிதுவும்)

இன்னிசை வெண்பா.

சுரிதகம்.

மதிநலத்தான் மிக்க மறைத்தமிழ்தேர் மாறன்
முதிய மகிழ்மாலை முன்னோன் குருகூர்த்
ததியர் புகழ்சங் கணித்தண் டுறையுட்
புதியவா மந்தண் புனல்.

இது, தரவிரட்டித்துத் தாழியாறு, மராக நான்கும், தாழிசை பின்னுமோராறுந், தனிச்சொல்லும், இரு சீரோரடிச் சிற்றெண்ணெட்டும், பின்னுமோர் தனிச்சொல்லும், பெற்று இன்னிசை வெள்ளைச் சுரிதகத்தா லிற்றுக் கலிக் கோதப்பட்ட வாறுறுப்பு மிக்குங் குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கி வந்தமையா னிதனை யொருசார் யாப் பருங்கலக்காரிகையார் மயங்கிசை கொச்சகக்கலி யென்ப. ஆசிரியத்தோடும் வெண்பாவினோடு மயங்கி வந்தமை யானென்று கொள்க. பகுதி—பரத்தையிற் பிரிதல். துறை—புனல்வர வுரைத்தல். அலங்காரம்—'வென்ற தொத்த தென்னும்' வாய்பாட்டா லொருதொடர்பினுட் பல வந்த வுவமை. இதன் வேறுபாடுங் காண்க. 21

கலிப்பா முற்றிற்று.

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

5. கோமகன் கனவு.

446 பக்கத் தொடர்ச்சி

மருண்ட பார்வையன், சிதைந்த உடையினன், மாசுற்ற யாக்கையன், சோர்ந்த உயிரினன் நின்ற அப்புஜங்கனைக் கருதிநோக்கிய அனைவரும் திகைப்புற்றனர். இந்நிலையில் இவனைக் காண்பரென எவரும் எந்நாளும் நினைத்திரா ராதலால் ஒருவருக்கும் அவன் அடையாளம் விளங்கவில்லை. வாசவனுக்கும் பஞ்சரவல்லிக்குமே இவன் புஜங்கனாய் இருத்தலும் கூடுமோ, என்னும் ஒரு ஐயம் தோன்றித்தோன்றி மறைந்துவந்தது. இன்னவாறு அனைவரும் தயங்குவதைக் கண்டு சரபசூரன், "கண்ணென்று போனால்தான் என்ன! உடன் நின்று கடும்போர் பலகால் புரிந்துள படைஞரும், தம் தலைவனை மறப்பரோ! புஜங்கனே இவன்." என்று சாற்றினன்.

பஞ்சரவல்லி மூர்ச்சனை யடைந்து வாசவன் ஏந்திய கரங்களிற் சாய்ந்தனள். வாசவன், கொடி படர்ந்த மரம் சிறுகாற்றிற்கு அசைவதுபோல் சிறிது ஆடி நின்றான். ஏனையவர் இரக்கமே மேலிட்டுப் புஜங்கனைப் பரிவுடன் நோக்கினர். மெல்லமெல்லப் பஞ்சரவல்லியும் களைதீர்ந்து நிமிர்ந்தனள். நிமிர்ந்து, "நயனம் இழக்கவோ நீ நெடுந்தூரம் முயன்றாய், எந்தாய்" என அவன் கால்களில் விழுந்தழுதனள். வாசவன், சரபசூரனது தோள்களைப்பற்றி, "யார் இவனை இக்கோலம் கண்டது! குற்றம் இவன் இழைத்தது உளதாயின் அது எம்மரசன்பால் இழைத்ததே ஆதலின் அன்னதைக் கடியும் உரிமையும் அவ்வரசற்கே பொருந்தியது. அவ்வாறிருக்க நீயேன் அவனது கண்ணைப் பறித்தாய்?" என வன்மையொடு உரைத்தான். காலில் விழுந்திருந்த பஞ்சரவல்லி எழுந்து "ஐயையோ, நின்னுருவம் காண ஏழை எனதன்னை எவ்வாறு ஆற்றுவாள். எந்தாய், எங்களுக்கோ பகையாகிப் பிறர் உறவு பற்றினாய், அவர்களுக்கேனும் உண்மையாய் ஒழுகியிருத்தல் கூடாதா! சென்ற இடமெல்லாம் நீ வஞ்சனையே புரிந்து சிறுமையுற வேண்டுமோ!" என்று அழுத நீர் அருவியாய்ப்பெருகியது. கடாரப் படைத்தலைவன் இவ்விருவருக்கும் முறையே "நானவனுக்கு எத்தீங்கும் செய்திலேன்," என்றும், "அவனும் என்பால் வஞ்சகம் புரிந்ததில்லை" என்றும் பதிலுரைத்தான். தேர்ப்பாகன் என்று நினைத்திருந்த அவ்விளவல்புஜங்கனைத்தந்தையென்று உறவு பாராட்டினது படைஞருள் சிலர்க்கு அளவற்ற ஆச்சரியம் தந்தது. வாசவன் அவர்களைப் பார்த்து, "உத்தமர்காள், இப்பேதையும் புஜங்கன் திருமடந்தையாம் பஞ்சரவல்லியே. என்மேலிருந்த ஆசையால் யானுமறியாமல் கரவுரு வெய்தித் தேருடன் போந்தனள். இரதந்தனில் வைகி இவள் நெருநல் போர் காத்த பரிசும் நீவிர் அறிவீர். அன்னவளைப் பெற்றெடுத்த புண்ணியத்தால் புஜங்கன் செய்த தீமையெல்லாம் நமதரசன் பொறுத்தருள்வான் என்பது திண்ணம். அவ்வாறாக, வேற்றரசற்குத் தொண்டுபூண்ட இச்சரபசூரன் எங்கோமானது அருளுக்குரிய புஜங்கனுக்குப் பழுதிழைத்தான் என்றால்........" என்றுரைப்பதன்முன் வீரர்களும் தம்வாட்களில் கைவைத்தனர். இதுவரையில் புஜங்கன் பேசாதிருந்தது ஒருவர்க்கும் புதுமையாய்த் தோன்றவில்லை. செய்த சதி சிறியதன்றாதலின் நாணத்தால் நாக்கூசி நின்றனன் என நினைத்தனர் சிலர். இச்சதிக்கு மாறாக அரசன் வகுக்கும் விதி எதுவோ எனும் அச்சமே திணிந்து வாயுரை தடுத்தது எனச் சிலர் எண்ணினர். சிலர் கண்ணிழந்த துக்கமும் அப்புண்ணினால் உற்ற நோயும் சொல்லெடுக்க விட்டதில்லை என மதித்தனர். ஆய தன்மையர் வாசவனுரைகேட்டுச் சினங்கொண்டு வாளில் கைவைக்கச் சரபசூரன், "யான்செய்திலேன், என்று செப்பியபின்னும் ஆராயாது நீர்வெகுளல் அழகிதன்று" எனத் தெழித்தனன். "நீ அல்லையென்று இப்புஜங்கனே நின்சார்பு பேசானேல், நான் வேறு எந்தச் சாக்ஷியையும் நம்பமாட்டேன். மற்று, என் காதலியை ஈன்றளித்த இப்புஜங்கனுக்குத் துயர் விளைத்தவன் யாவனாயிருப்பினும் அவன் என் சீற்றத்திற்கு ஆளாகின்றான். இருகண்களையும் கொந்தி நாவைப் பிளந்து வாயைக்கிழித்து நாசியைத் துணித்து உடலையும் நாலுகூறிட்டு அவனைப் பருந்தாட்டம் ஆடாதொழியேன்" எனப் பகர்ந்தான் சீற்றத்தால் செம்மொழியும் அயர்ந்த கோமகன். இது கேட்கச் சாபாலனது மனமும் மெய்யும் உயிரும் நீறாய் உதிர்ந்தன. நிற்பதற்கு உதவியாய்ப் பிடித்திருந்த ஆட்களின் தோள்களில் அவனது இரு கைகள் சாப்பறை அடிக்க, எஞ்சிய ஒன்றரைக் கால்களும் கிடுகிடுவென நடுங்கின. எந்நாளும் பொருள்வளம் இல்லா அவன் நாக்கு இன்று நீர் வறண்டு கடுஞ்சுரம் ஒக்க உலர்ந்தது. விழி பிதுங்கின. கொடிறு இடித்துப் பல்லெல்லாம் நொறுங்கிப் பிதிர்ந்தன. மெய் முழுதும் வியர்வையின் வெள்ளம் வழிந்தோடியது. வேறு பல விளம்புவதேன். நான்முகனே படைத்த அக்கடாரக் காக்கையைப் பொந்தினில் இருந்தபோதுகண்ட புழுவேயெனப் புலவன் பதைத்தனன். சாபாலனுக்கு ஊன்றுகோலாயிருந்த அவ்

விரு ஆட்களும் கடாரமன்னவனது கடைக்காவலாளரே ஆவர். முன்னிரவு இவனையும் புஜங்கனையும் போர்க்களத்தினின்று பற்றி ஏகியவரும் இவர். இவ்வாட்களில் ஒருவன் சாபாலனது தாடியைத் தடவி, "ஏ, சவமே, எதற்காகத் துடிக்கின்றாய். உன் புராணத்தின் பாட்டுடைத்தலைவனது கணங்களே யுன்னைச் சிறிது நேரத்தில் குத்தித் தின்னும், பயப்பட வேண்டா" எனப்பகர, மற்றவன் "இப்புன்கவியின் நிணம் காக்கைக்கும் கைக்குமே. இவன் தசையை அவை தீண்டவும் தீண்டா!" என முடித்தான். இன்னவகை யொருபுறம் நிகழ, வாசவன் அவ்வொன்றும் கருதாமல் புஜங்கனுக் கெதிர்நண்ணிப், "புஜங்கா, உன் விதிக்குப் பெரிதும் வருந்துகின்றேன். எம்பால் நீ செய்தபிழை பெரிதாயினும் அது பிறருனக்குச் செய்த அழிவில் மறைந்து போயது. உன்னை யான் சமித்தேன் என்பதற்குச் சான்றாக ஐய, உன்னுடைய கண்பறித்த கள்வனை நின்முன் மாய்ப்பன், அன்னான் யாவனெனக் கூறுதி?" என்று கேட்டான். கோமகன் பகர்ந்த நயமொழியைச் சிறிதேனும்உணர்ந்தகுறி புஜங்கன் முகம் காட்டவில்லை. சுவாசம் ஒன்றே அவன் செத்ததில்லை என்று காட்டியது. "வாய்திறந்து பேசாயோ, எந்தாய்" எனப் பஞ்சரவல்லி ஏங்கினாள். சரபசூரன், "இளவரசே, இப்புஜங்கன் அடைந்துள பழுது நீ முற்றிலும் உணர்ந்ததில்லை. கண்ணன்றி அவன் மதியும் இழந்துளான். யான் எவ்வளவு வினவியும் நேற்றிரவுமுதல் இதுகாறும் ஒன்றும் அவன் பேசியிலன். உற்ற இடரினால் உன்மத்தன் ஆயினான் என நினைக்கின்றேன்," எனச் செப்பினான்.

"மதியை இழந்தனனோ, அல்லது நற்புத்திதான் பெற்றானோ யார் அறிவர்! தனக்கு இன்னா செய்தவனது தலைகாக்க எண்ணியே அவன்பேரைப் பேசாதிருக்க இம் மோனவிரதம் பூண்டிருத்தலும் ஆகும்" என்றனன் வாசவன்.

"வாசவ, வீண் ஐயம் வேண்டா. இவன் கண்ணைக் குத்திய கள்ளனும் இங்குளான். அவனுக்கு நீ என்ன சித்திரவதை செய்வித்தாலும் எனக்குச் சம்மதமே," என்று சரபசூரன் சொல்லிச் சாபாலப்புலவனை முன்னிழுத்து நிறுத்துமளவில் "ஐயையோ, தெய்வமே செத்தேனே, போனேனே ஐயையோ, தெய்வமே நானில்லை நானில்லை, ஐயையோ நானில்லை! தெய்வமே நானில்லை. அவன்தான் என் காலை வெட்டினான். நானோ ஐயா, கவி கவி ஒரு கவி, 'ஐயையோ கவியே கவி. ஔவியம் ஔவியத்தால் என்மேல் பொய்ப்பழி ஏற்றுகின்றார்கள். போர்க்களத்தில் இவன் கண்ணில்லாமல் படுத்திருந்தது எனக்கு எப்படித் தெரியும். பொய்யையோ, பொய்! இல்லையோ நானில்லை. எழுத்தாணியை எடுத்துக்கொண்டு நான் ஏன் போர்க்களம் போகிறேன்!" என்று கவி சக்ரவர்த்தி வயிறலைத்துக் கதற ஆரம்பித்தான்.

"யாவன் இம்மூடன்! புஜங்கனை இவன் நலிந்ததற்குக் காரணம் என்ன?" என்று வினவச் சரபசூரன், ஏமாங்கதக் கவியென்று காக்கைப் புராணத்தோடு ஆதியில் அவன் கடாரம் வந்ததும், தம் மன்னனது அவையுளோர் அங்கு அவனை இகழ்ந்ததும், சிங்கமுகனையே இகழ்ந்ததாகப் பாவித்து இவன் சினங்கொண்டதும் கூறிப், பின், புஜங்கன் கடாரம் போந்து போர் வேண்டியதும் அதற்கிசைந்து தன்னைப் புவனேச்வரன் படையுடன் விடுத்ததும், பிறகு புஜங்கனுக்குத் துணை நின்று அவனைப் பாராளவைப்பதற்கு மதிகெட்டுத் தான் முயன்ற பரிபவமும் யாவும் எடுத்தோதி, "ஐய,மற்று இப்புஜங்கன் கண்ணிழக்க நேர்ந்த விதம் கண்டவர் வாயினின்றே உணர்க" என்றுரைத்துக் காவலாளரை அது செப்புமாறு ஏவினார். அவர்களும் முன்னிரவு போர்க்களத்தில் தாம் கண்டறிந்த அளவு கூறினர். இவையனைத்தும் கேட்ட இளவரசனுக்கு அவரவர் செய்கை தெரிந்ததேயன்றி அச் செய்கைகளைத் தூண்டிய கருத்து இன்னதென்று விளங்கவில்லை. "ஏ, பாதகா, நீ படுகளம் போகநேர்ந்ததும் அங்கு நீ இவன் கண்ணை அழிக்க ஆனதும் ஏனடா! என்று சாபாலனை வினவினான். அவனும் மறுபடி "ஐயையோ, நானில்லை......"என்று தொடங்கச், "சீ! சீ! சனியனே, உண்மையைச் சொல், இல்லையேல் இப்பொழுதே செத்தாய். சொல்வாய் ஆயின் உன்னைக் கொண்டுபோய் அரசன் முன்விட்டு அவன் ஆணை விதிக்குமளவும் உனக்கு உயிர் உண்டு, சொல்," என்று வாசவன் தடுத்துக் கூறினான். இதைக் கேட்கவும் சாபாலன் உயிரைக் கட்டிஇழுத்த மறலி இன்றையளவு விட்டால்போதும் என ஒருசிறிது தேறித் தன் வரலாறும், பாடிய பரணி போனவாறும், புஜங்கனது கண் ஒழிந்தவாறும் பொருந்தத்தகாத உவமைகளால் விளக்கிக் "கல்வி குறைந்த இக்காலம் கவிவாணர்க்கு நற்காலமன்று. யாரை நான் நோவது," என்று அச்சமின்றிச் செருக்குடன் செப்பி முடித்தான்.

கண்டதும் கேட்டதும் எல்லாம் வாசவனுக்குக் கலக்கம் விளைத்தன. புஜங்கன் கடாரத்திற்குப் போயின கருமம் தனக்குத் தெரிந்திருந்தும், அவன் வந்தவிதமே கவற்சி உண்டாக்கியதென்றும் சிங்கமுகன் சொன்னதற்கும் இப்பொழுது சரபசூரன் சொன்னதற்கும் பொருத்தம் அமைந்திருத்தலாலும் வேறுசில அநுமானங்களாலும் புஜங்கன் கடாரத்திற்குச் சென்று அறைகூவியது தன் தந்தைக்கும் உடன்பாடுடையதோ என்று வாசவன் சிந்தித்தான். அச்சமயம், போரிற்குப் புறப்படுமுன் சிங்கமுகன் தன் படைஞருக்குப் புகன்றவெலாம் வாசவன் நினைவினில் வர, அச்சொற்களின் பொருள்களை இப்பொழுது நன்குணர்ந்து ஈன்றோன் பேரன்பு இருந்தவாறு உன்னுந்தோறும் உன்னுந்தோறும் அவன் மனம் கனிந்து உருகியது. பஞ்சரவல்லி இதுகாறும் யாதும் உரைத்திலள். புஜங்கன் கொண்ட பேராசைக்கு அவள் சிறிது இணங்கி இருப்பாளாயின் இப்பெருந்தீங்கு நேர்ந்திராதன்றோ வெனச், சற்றுக் கழிவிரக்கம் கொண்டாளேனும், பிறகு தனது பெருமையும் இழுக்குற அவன் பேராசைக்கு இணங்கியிருந்தால் இதனினும் பெருந்தீங்கு என்ன புகுந்திருக்குமோ என உள்ளந் தேறினாள். தகப்பனை முன்னொருநாள் தனிப்போர்க்கு அழைத்த இப்பெண் இந்நாள் மனந்தளர்ந்து கைபிசைந்து நிற்க வாசவன், துயரம் ஆறும்வகை பல மெல்லென மெல்லென ஓதி அவளை அவ்விடம் விட்டழைத்தேகித் தன் கூடாரத்திற்குள் சேர்ந்தனன்.

பகற்பொழுது கழிந்தவுடன் தன்படையெலாம் புடைசூழ வாசவக்கோமகன் இராசமாபுரத்திற்குப்

புறப்பட்டான். மருள்பற்றிய புஜங்கன் ஆட்கள் சிலர் பாதுகாக்க மரப்பாவைபோல் ஒருதேரில் வைகிவந்தனன். முன் வந்த வண்டியே நொண்டிப்புலவனுக்கு மீண்டும் வாகனமாயது. பஞ்சரவல்லி அங்கதக்கோலமும் சாரதித்தொழிலும் துறந்து வாசவனுடன் இரதமிசை ஏகினாள்.

கடாரத்தானையின் தலைவன் சரபசூரன் கோமகனைப் பணிவுடன் வழியனுப்பி விடைவினவ, வாசவன், "நண்ப, இனிதின் ஏகுதி, எமதொரு தீதினால் நம்மரசற்கு இடுக்கண் விளைந்ததுகருதிப் பெரிதும் பரிகின்றோம். இப் போரும் அதன் கருத்தும் நிகழ்ந்த வண்ணம் நீ முற்றிலும் அறியாய். ஐய, நும்வழியும் இனிதே கழிக, ஏகுதி" எனப் பணித்தான்.

"அசடன்யான் புஜங்கனது பொய்யுரையை மெய்யெனக்கொண்டு நின் கோத்தந்தையின் வாய்மையை அயிர்த்த பிழை பொறுத்தி" என இளவரசனைப் பன்முறை தொழுது சரபசூரனும், மீண்டனன்.

தமிழ்ப் பாடம் 76.

[நளவெண்பா.]

(455 பக்கத் தொடர்ச்சி)

கலி நீங்கு காண்டம்.

இறுமாந்து வந்த புஷ்கரன் நளனுடன் ஆடிய மறுசூதில் எல்லாவற்றையுந் தோற்று வந்தவழியே திரும்பிப்போனதை இனிவரும் நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

செங்கோ லரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோ லரசன் வினவினான்—அங்கோலக்
காவற் கொடைவேந்தே காதலற்குங் காதலிக்கும்
யாவர்க்குந் தீதிலவே யென்று. 88

அன்வயம்:—தேர்ச்சி இலா வெம்கோல் அரசன், செங்கோல் அரசன் முகம்நோக்கி, "அம் கோலக் காவல் கொடை வேந்தே, காதலற்கும் காதலிக்கும் யாவர்க்கும் தீது இலவே" என்று வினவினான்.

பொழிப்புரை:—கலிநீங்கிய நளன் இப்பொழுது தன் செல்வத்தையெல்லாம் மீண்டும் பெறுவதற்கு வந்திருப்பதைத் தேர்ந்துகொள்ளாத அந்தக் கொடுங்கோல் அரசனாகிய புஷ்கரன், செங்கோல் அரசனாகிய நளனுடைய முகத்தைப்பார்த்து, "அழகிய அலங்கார மமைந்த காவல் அரண்களையுடையவனும் கொடையிற் சிறந்தவனுமாகிய நளவேந்தனே, உனக்கும், உன் மனைவிக்கும் மக்கள் முதலிய யாவருக்கும் தீது ஒன்றும் இல்லாமல் நீங்கள் சுகமாக இருக்கின்றீர்களா" என்று கேட்டான்.

விரிவுரை:—புஷ்கரன் கேட்ட இது குறும்புக் கேள்விபோல் தோன்றுகின்றது. அவர்களை அவன் கெடுத்தவரையில் கெடுத்துவிட்டுப் பிறகு பரிகாசமும் செய்த கொடுமையிது. 'காதலற்கு', என்ற அச்சொல் படர்க்கையிலிருப்பதால், அதனைக்'காதலனாகிய உனக்கு' என்னச் சிறிது வலிந்து பொருள்கொள்ள வேண்டியிருக்கின்றது. அச்சொல்லில் வல்லின றகர மெய்க்குப் பதிலாய் இடையின ரகரமெய் இருக்குமானால், அது 'காதலர்க்கு' என்று ஆகி, மக்களைக் குறிப்பது இயற்கையாகும். "உன் மக்களுக்கும் மனைவிக்கும் மற்றயாவருக்கும் தீது இலவே", என்று கேட்குமளவிலேயே 'நீயும் க்ஷேமமா' என்பதும் அடங்குவதாகும். 'காதலர்க்கு' என்ற பாடபேதம் இருக்குமாயின் அதுவே கொள்ளத்தக்கது.

குறிப்பு:—செம்கோல், வெம்கோல், என்னும் தொடர்கள் பண்புத்தொகைகள்—செம்மை ஆகிய கோல், வெம்மை ஆகிய கோல், எனவிரியும்.

கொடை வேந்தே, என்பது கொடையில் சிறந்த வேந்தே என விரியுமாகையால், ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. அல்லது, கொடையால் சிறந்த வேந்தன், என விரியினும் விரியலாம். ஆகையால் மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்றும் கொள்ளலாம்.

தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணயமென வியம்பச்—சூதாட
மையாழி யிற்றுயிலு மால்பராய் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து. 89

பதப்பிரிவு:—தீது தரு கலி முன் செய்ததனை ஓராதுஏ யாது பணயம் என இயம்ப சூது ஆட மை ஆழியில் துயிலும் மால் பராய் வண்மை புனை கை ஆழி வைத்தான் கழித்து.

அன்வயம்:—தீது தரு கலி முன் செய்ததனை ஓராது, "பணயம் யாது?" என (புஷ்கரன்) இயம்ப, (நளன்) மை ஆழியில் துயிலும் மால் பராய், வண்மை புனை கைஆழி கழித்து சூது ஆட வைத்தான்.

பதவுரை.

தீது - தீமையை
தரு - உண்டாக்குகின்ற
கலி - கலிபுருடன்
முன்-முதற்சூது ஆடியபோது
செய்ததனை - செய்த வஞ்சனையை
ஓராது - உணராமல், (புஷ்கரன்)
"பணயம் - பந்தையப்பொருள்
யாது - எது"
என - என்று
இயம்ப - கேட்க, (நளன்)
மை - கரிய
ஆழி - கடலில்
துயிலும் - கண்வளர்கின்ற
மால் - திருமாலை
பராய் - வணங்கி
வண்மை - கொடையை
புனை - அணிந்திருக்கின்ற
கை - கையில் இட்டிருந்த
ஆழி - மோதிரத்தை
கழித்து - கழற்றி,

சூது - சூதினை
ஆட - ஆடுவதற்குப் பணயமாக
வைத்தான் - வைத்தான்.

விரிவுரை:—திருமால் பள்ளி கொண்டிருப்பது வெண்மையான பாற்கடலாயினும் அதனை 'மை ஆழி' என்று புகழேந்தி அழைத்ததற்குக் காரணம் இருக்கின்றது. திருமாலினது கரிய திருமேனியின் ஒளி நிறம் கதுவிப் பாற்கடல் முழுவதும் கருங்கடல்போல் தோன்றும்படி செய்திருக்கும்.

குறிப்பு:— தருகலி, என்பது வினைத்தொகை. தருகின்ற கலி, என விரியும். தந்த தருகின்ற தரும், என்ற பெயரெச்சங்கள் காலங்காட்டும். அது இங்குக் காலம் காட்டாமல் 'தரு' என்று மாத்திரம் குறைந்து நிற்பதால் வினைத்தொகை ஆயிற்று.

அப்பலகை யொன்றி னருகிருந்தோர் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்—ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்றானை வென்றானவ் வேந்து. 90

கருத்து:—முன் தன்னை வஞ்சனையால் வென்று செல்வமெல்லாம் அபகரித்துக்கொண்ட புஷ்கரனை இப்பொழுது நளன் சூதாட்டத்தில் வென்று அவைகளை மீண்டும் பெற்றான்.

குறிப்பு:—முதலில் வந்த 'வென்றான்' என்பது வினையாலணையும்பெயர். அது இரண்டாம்வேற்றுமை பெற்று, 'வென்றானை' என நின்றது. மற்ற'வென்றான்' என்ற சொல், வினைமுற்று.

அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்[ங்
நாவேய்ந்த சொல்லா னளனென்று போற்றிசைக்கு
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து. 91

பொழிப்புரை.—அந்த வளநாட்டையும் அதன் ஆட்சியையும் புஷ்கரன் தோற்று, செந்தமிழ்ப்புலவர்கள் நாவினால் தொடுத்த சொற்களால் நளன் என்று துதிக்கும் சக்கரவர்த்திக்கு எல்லாவற்றையும் கொடுத்துத்தான்வந்தவழியைப் பார்த்துக்கொண்டுபோனான்.

இலக்கணம்

முன்உரைத்தபடி,உம்மைத்தொகைப் புறத்தில்சில சொற்கள் தொக்கு இருந்து அன்மொழித்தொகை ஆவதுபோலவே, வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை ஆகிய மற்ற நான்கு தொகைநிலைத்தொடர்களுக்குப் புறத்தேயும் சில சொற்கள் தொக்கு இருக்கின்ற காரணத்தால் அன்மொழித்தொகைகள் ஆகலாம்.

"நான் ஓர் அணியிலக்கணம் வாங்கினேன்," என்ற வாக்கியத்திலுள்ள "அணி யிலக்கணம்," என்னும் தொடரை அத்தொடர்வரையில் பார்த்தால், அது நான்காம் வேற்றுமைத் தொகையாகும். 'அணிக்கு இலக்கணம்' என விரியும். ஆனால் அவ்வளவு மட்டில் விரிவது அவ்வாக்கியத்தின் பொருளுக்குப்போதாது. "நான் ஓர் அணிக்கு இலக்கணம் வாங்கினேன்" என்றால் என்ன அர்த்தம். இலக்கணத்தை எவ்வாறு வாங்க இயலும்? ஆகையால் அது, 'அணிக்கு இலக்கணம் எழுதியுள்ள புத்தகம் வாங்கினேன்' என்று விரியவேண்டியது அவசியமாகின்றது. எனின் 'எழுதி உள்ள புத்தகம்' என்ற சொற்களும் தொக்கு இருக்கின்றன. இவ்விதம், வேற்றுமைத் தொகைக்குப் புறத்திலே பின்னும் சில சொற்களும் தொக்கு இருத்தலால், 'அணியிலக்கணம்' என்னும் தொடர் இவ்வாக்கியத்தில் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ஆகும். அவ்வேற்றுமையும் நான்காம் வேற்றுமையா யிருக்கின்றபடியால், நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை யாகும். அவ்வாறன்றி "நான் அணியிலக்கணம் கற்றேன்" என்பது வாக்கியமாயின், 'நான் அணிக்கு இலக்கணம் கற்றேன்' என்று அத்தொடரின் இடையில் வேற்றுமை உருபு மாத்திரம் விரிவது பொருளுக்குப் போதும். ஆகையால் இப்பொழுது இது வேற்றுமைத் தொகைதான், அன்மொழித்தொகை அன்று.

இவ்விதம் மற்ற ஐந்து வேற்றுமைத் தொகைகளுக்குப் புறத்தேயும் அன்மொழித் தொகைகள் பிறக்கக்கூடும். வேற்றுமைத் தொகைகள் அல்லாத வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகைகள் புறத்தேயும், உம்மைத் தொகைக்குப் புறத்தே பிறப்பதேபோல், அன்மொழித் தொகைகள் பிறக்கும்.

சுயம்வரகாண்டம், 20வது செய்யுள் "எழுவடுதோண் மன்னு இலங்கு இழை ஏர்தூண்ட" என்ற முதலடியில் உள்ள 'இலங்கு இழை'என்னும் தொடர் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்கு நல்ல உதாரணம். 'இலங்குகின்ற' என்றிருக்கவேண்டிய பெயரெச்சம் காலம் மறைந்து 'இலங்கு' என நிலைமொழியாய் நிற்பதால், 'இலங்கு இழை' என்பது அத்தொடர்வரையில் வினைத்தொகை ஆகின்றது. ஆனால் 'இலங்குகின்ற இழை' என்றுமட்டும் விரிந்தால் அத்தொடர் இவ்வடியில் ஒன்றும் அர்த்தம் தரவில்லை. இழை (ஆபரணம்) ஏர் ஒட்டமுடியாது. இந்த இடத்தில் ஆகையால் 'இலங்குகின்ற இழைகள் அணிந்தவர்கள்' என்று அத்தொடர் விரியவேண்டும். எனவே இறுதியிலும் 'அணிந்தவர்கள்' என்று ஒருசொல்லும் தொக்கு இருக்கின்றது. ஆகையால் இதனை வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை என்று அழைப்பர். 'இலங்கு இழை' என்றதொடர் எப்பொழுதும் அன்மொழித் தொகையாகவே இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அது வினைத்தொகை அளவிலேயே நின்றும் விடலாம். 'இந்த இலங்குஇழை என்னவிலை' என்ற வாக்கியத்தில் 'இலங்குகின்ற இழை' என்று விரிந்தாலே பொருள் பெற்றுப் பின் ஒன்றும் தொக்கு இருக்கவில்லையாகையால் அது அன்மொழித் தொகையன்று; வினைத்தொகையே.

இப்படியே, ஆய் இழை, செறிவளை, புரிகுழல், தாழ்குழல், என்னும் தொடர்கள், ஆய்ந்த இழைகளை அணிந்தவள், செறிந்த வளைகளை அணிந்தவள், புரிந்த கூந்தலையுடையவள், தாழ்ந்த கூந்தலை உடையவள், என விரியவேண்டிய இடங்களில் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைகளாகும். எனினும், சுயம்வரகாண்டம் 3-வது செய்யுளில், ஆய் இழையார்! என்று வந்திருக்கின்ற தொடர் அன்மொழித்தகை அன்று. ஏனெனில் இழையார், என்பதற்கே இழைகளை அணிந்தவர் என்று அர்த்தம். ஆகையால், இழையார் என்ற வருமொழிக்குப் பின்

வேறொன்றும் மறைந்திருக்கவில்லை. எனவே, 'ஆய்ந்த இழையார்' என்ற மட்டில் அது விரிந்தால் போதும். ஆகையால் அது வினைத்தொகை மாத்திரந்தான்.

இனி, பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைகளைப் பார்ப்போம். கலிதொடர் காண்டம் 127வது செய்யுள் இரண்டாவது அடியில் 'பைந்தொடி' என்ற தொடர் வந்திருக்கின்றது. அத்தொடர் தன்வரையில் 'பசுமை ஆகிய வளையல்' என விரிந்து நிற்கும். ஆகிய என்னும் பண்பு உருபு, நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே தொக்கு இருத்தலால் அத்தொடர் பண்புத் தொகைநிலைத் தொடர். ஆனால் வேடன், "பசுமை ஆகிய வளையலை' அன்று தன்னோடு வரும்படி அழைத்தது. பசுமை ஆகிய வளையலை அணிந்தவளைத்தான் அழைத்தான். ஆகையால் அப்பண்புத்தொகைக்குப் புறத்தேயும் 'அணிந்தவள்' என்ற ஒரு சொல் தொக்கு இருக்கின்றது. எனவே, இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. சுயம்வரகாண்டம் 90-வது செய்யுள் முதலில் 'பைந்தொடியாள்' என்று வந்திருக்கின்றதொடர் அன்மொழித்தொகை அன்று. தொடியாள் என்றாலே வளையலை அணிந்தவள் என்பது அர்த்தம். ஆகையால் புறத்தே ஒன்றும் மறைந்திருக்காமல், பண்புத்தொகையாக மாத்திரம் அத்தொடர் நிற்கின்றது.

இனி, சுயம்வரகாண்டம் 41-வதுசெய்யுளில் வந்திருக்கின்ற 'பொற்றொடிக்கு' என்னும் தொடர் அன்மொழித் தொகையே. ஆனால் அது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை அன்று. அது விரிந்தால், "பொன்னால் செய்த தொடியை அணிந்தவளுக்கு" என விரியும். வேறுபாடு உண்டானது தொடிக்கு அன்று; தொடியை அணிந்தவளுக்குத்தான். ஆகையால் அத்தொடரின் இறுதியில் 'அணிந்தவள்' என்ற ஒரு சொல் மறைந்திருக்குங் காரணம்பற்றி அது அன்மொழித்தொகை யாவதை அறியலாம். ஆனால் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே மறைந்திருப்பது 'ஆகிய' என்னும் பண்பு உருபு அன்று. ஆகையால் பண்புத் தொகை ஆகாது. இடையே தொக்கு இருப்பன ஆல்,என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும், செய்த என்னும் சொல்லும் ஆம். ஆகையால் 'பொன்தொடி' என்பது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. இங்கு அணிந்தவள் என்ற சொல்லும் புறத்தில் மறைந்திருப்பதால், அது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

'அக்கருங்குழலை இப்பெருந்தகை காதலித்தான்' என்ற வாக்கியத்தில் கருங்குழல், பெருந்தகை, என்ற இரண்டு தொடர்களும் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகள் ஆவதைக் காணலாம். ஏனெனின், அவை, 'கருமை ஆகிய குழலை உடையவள், என்றும், 'பெருமை ஆகிய தகையை உடையவன்' என்றும் விரியவேண்டும். தகை = குணம்.

இவ்விதம், உவமத்தொகைப் புறத்தும் அன்மொழித்தொகைகள் பிறக்கலாம். 'மயில் இயல்' என்ற தொடர். 'மயில்போன்ற இயல்' என விரியும். ஆகையால், அது உவமத் தொகை. (இயல்=தன்மை) 'மயிலியல் நின்றாள்' என்பது வாக்கியமாயின் அத்தொடர், 'மயில்போலும் இயலை உடையவள்' என விரியுமாகையால், அன்மொழித் தொகையாகும். துடியிடை, பிறைநுதல், முதலியவைகள் காரணப் பெயராப் மாதர் என்னும் பொருளில் வரும்போது உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகளாம்.

பட்டினத்துப் பிள்ளையார்.

189059

[454 வது பக்கத் தொடர்ச்சி]

III

"இயற்கை உலகை உற்றுப்பார்! கட்டு ஒழுங்கு சீர் முறைமை யில்லாததாய், நன்மை தீமைகளென்ற வரம்புகளற்றதாய், அறம் மறம் என்ற அறிவற்றதாய், தோன்றி வளர்ந்து, வளர்ந்து பெருகி, பெருகித் தேய்ந்து, தேய்ந்து மறைவதாய், மீண்டு மீண்டும் இம்முறையையே தொடர்ந்து இயங்குவதெனக் காணப்படுகின்றது! வானவில் ஓர் பக்கத்திலும் எரிமலை மற்றொரு பக்கத்திலுமாய், தாமரை நிறைந்த தடாகங்கள் ஓர் பக்கத்திலும் முதலைகளும் சுறாமீன்களும் செறிந்த பெரிய ஆறுகளும் அகாதக் கடலும் மற்றொரு பக்கத்திலுமாய், மானும் வேங்கையும், முயலும் பருந்தும், களிறும் கோளரியும், இளந்தளிர்களும் புல்லிய சருகுகளும், கடுங்காற்றும் மெல்லிய தென்றலும், குளிர்ச்சியும் வெப்பமும், கோடையிடியும் பூகம்பமும் கூடப்பெற்றதாய் அது நமக்கு விளங்குகின்றது. பிரகிருதிசாஸ்திர விற்பன்னர்கள் மேற்சொல்லியவைகளை நோக்கி ஆராய்ந்து, அவைகளிலொவ்வொன்றும் முறைப்படிக்கே நிகழ்தலாவனவெனக் காட்டியபோதிலும், மேற்பார்வைக்கு அவை குழப்பமுற்று யாதொரு பொருளும் பொருத்தமும் இறுதிமுடிபும் நன்மையும் அற்றவைகளாக விளங்குகின்றன. இவ்விபரீத பிரகிருதிமாதாவின் வயிற்றில் எச்சமயத்திலோ, எவ்விதமாகவோ, உதித்தனன் மானுடன். கல் இடர்ப்பட்டால் துஞ்சுவான் அவன்; காற்றுச் சற்றுப் பலமாகவீசினால் வேரற்ற மரம்போல் சாய்ந்து வீழ்வன் ; வெப்பத்தினால் வாடுவான் ; சீதளத்தால் துடிப்பான்; பசியினால் பதறுவான் ; தாகத்தினால் தயங்கித் தவிப்பான்; பசிதாகங்களடங்கினால் களித்து ஆடுவான், குதிப்பான் ; இவனுக்குங் கீழான ஊர்வன பறப்பன நடப்பனவைகளைக் கண்டு அஞ்சியோடி யொதுங்கிப் பதுங்குவான் ! இன்னமும், இவனுடைய செயல்களிற் பெரும்பான்மையும் இயற்கைத் தேவியினால் கலைத்து அழிக்கப்படுகின்றன ! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி இறுமாந்திருக்கையில், இயற்கை அன்னையின் விசித்திர இயக்கங்களால் மனம்புழுங்கி இதயமுடைந்து மாய்கின்றனன்! மாற்றாந்தாயாக விளங்கும் இயற்கையைப்

பொறுத்தவரையினும், மானுடன் ஓர் உமிக்குச் சமமானவன்! இவனுடைய அகப்போக்கு முயற்சி லக்ஷியம் புறக்கருமங்களெல்லாம், காலக்கிரமத்தில், துகளாகிப் பறக்கின்றன! இவனைச் சுற்றிலும் கடல் மேடாகவும், இனியஉத்யானவனம் கொடிய பாலைவனமாகவும், பள்ளத்தாக்குக்கள் பர்வதங்களாகவும், பர்வதங்கள் சமபூமியாகவும், பெருந்தேசங்கள் தீவுகளாகவும் மாறிச் சிதறி, இப்பொழுது இவ்விடத்தில் இருக்கும் நாடு நாளை வேறோர் இடத்திற்குத் தள்ளப்பட்டும், வெள்ளத்தால் கடலால் முற்றிலும் விழுங்கப்பட்டும், எரிமலைகளால் மூடப்பட்டும் வருகின்றன! மேலேற்றம் சீர்திருத்தம், இன்பம், அமைதி என்பனவாதிகளெல்லாம் பித்தர் மொழிகளே!'' என்றென்று கழறுவார் ஒரு வகுப்பு 'அறிஞர்'.

"அற்றன்று: இப்பிரகிருதியின் தோற்றத்திற்கு முன்னமே உளன் மனிதன்; இவ்வண்ட பிண்ட சராசரங்களனைத்தும் குறுகி மறைந்தபின்னும் நிலைத்திருப்பவன்; இயற்கைலீலைகளின் ஆதிக்கியத்துட்பட்ட கேவல பிராணிபோல் தோன்றினும், பிரகிருதியின் ஆரவாரங்களை அடக்கித் திருத்தி, எதிர்த்துயர்ந்து, இயற்கையின் நாதனை பரமான்மாவின் கருணையினால் ஆதரிக்கப்பட்டுத் திகழ்பவன்; ஜீவான்மாவையும் பரமான்மாவையும் பிணைக்கும் பாலமாம் பிரகிருதி; அல்லது, ஜீவான்மாவை மேலுயர்த்தும் ஏணியாம் இயற்கை உலகம். பரமான்மாவின் அம்சமான ஜீவான்மா என்றும் அழியாதது, அகச்சக்தி மிக்கது, ஞானம் நிறம்பியது, அன்பு ததும்பப் பெற்றது, பிரகிருதி லீலைகளுக்கு அடிமையாகாதது. உலகவாழ்க்கையாகிய வலையிற் சிக்குண்டு, சிறிதுகாலம் மயங்கி அவதிப்பட நேரிடினும், உட்சக்தி பரிணமிக்கவே, வலி வருத்த மேக்கமாகிய வளையங்களைத் தெறித்து, ஜீவான்மா உன்னத நிலை யெய்துகின்றது. பிரகிருதியினது படாடோபங்களெல்லாம் ஜீவான்மாவைப் பாதிக்க வல்லன வல்ல. விசாலமான இவ் வுலகை உற்றுப்பார்த்து, ஆரத்தீர ஆலோசிப்போமாயின், இன்னலிடர்களெனப்படுவனவெல்லாம் பொறிகளின் தூய்மைக்கும், விவேக விரிவுக்கும், ஞானம் பழுத்த அன்பு சுரத்தற்குமே ஆதாரமானவை என்னுமிது விளங்கலாகும். குறுகிய நோக்கமும், சிறு தொழிலும் மூடநம்பிக்கையும், தன்னலப் பெருக்கமும் கூடப்பெற்ற புல்லியமாக்களே இடுக்கணுறுவர்'' எனப் போதிப்பர் மற்றொரு சாரார்......

நமது பட்டினத்தார் பாடல்களைக் கவனித்துப் படிப்பின், இவ்வுண்மைகள் ஒருவாறு தெளிவாகும். இவ்வுலகாதிகளையும் வாழ்க்கை இரகசியத்தையும் ஊன்றி விசாரித்துப் பார்த்தறிய முயற்சிப்பவருள், இவருக்குண்டானதுபோல், வருத்தமும், ஐயமும், அறிவும், ஏக்கம் அல்லது தளர்ச்சியும், பின், தெளிவும் உறுதியும் ஊறி யடங்கிச் செழித்துக் கடைசியில், சாந்தியும் இன்பமும் உண்டானவர் வெகு சிலர். இவரும் இவரினத்தவரும் உலக வாழ்வையும் சரீரத்தையும் பெண்பாலரையும் பழித்துக் கூறுவதினால், அவர்களை மானுடத் துவேஷிகளென முடித்து ஒதுக்கக் கூடாது. அவைகளின் பெருமையையும் பயனையும் இவர்களும் நன்குணர்ந் தறிந்தவர்களாவர். ஆனால், மிதமீறி அவைகளிற் புகுந்து, சீர்கெட்டு அழியக்கூடாதென்ற நோக்கத்தினால் அவ்வாறு உபதேசித்து வருகின்றனர் போலும். சிற்றறிஞர்க்கு விபரீதமாகத் தோன்றும் இவ்வழிகளால் பெண்பாலரின் சிறப்பையும், வாழ்க்கையின்மேன்மையையும், தியாக சிந்தனையின் மாண்பையும் யதார்த்தத்தில் நிரூபிக்கின்றவர்களாகலாம்.

IV

ஏகம் என்பதின் பொருளென்னை? யாவற்றையும் படைத்து, உள்ளிருந்து இயக்கும் வஸ்துவின் கருத்து என்னை, குணம் யாதோ? ஜடமோ, ஆகாயமோ, சக்தியோ, பாரமார்த்திகமோ? அனலும், அறலும், விரிவும், ஆழமும், சுழற்சியும், ஓட்டமும் கூடி விளங்கும் பிரபஞ்சம் புத்தியின் இயக்கமாய், சிந்தனைகளின் பலதிறப்பட்ட அவதாரங்களாய், அக்ஷரங்களின் இனிய தொனியாய், பல்வேறு உருவங்கள் ஓடப்பெற்ற ஆறாய், துல்லிய ஆன்மாவின் தோற்றமாய்த் திகழ்வதோ? தோற்றங்களுக்கெல்லாம் அப்பாலாய் அடிப்படையாய் ஆதியாய் அந்தமாயொன்றுளதோ? மனமெனுஞ் சாளரத்தின் வாயிலாக அவ்வஸ்துவைப் பார்த்தற்கும் நிர்ணயித்தற்கு மியலுமோ? சைதன்னியத்தினால் கிரஹித்துணரப்படுவது உண்மையோ? அல்லது, வர்ணக் கண்ணாடிபோன்ற மலினமனத்தின் பொய்யாய்ச் சலிக்கும் பிரதிபிம்பங்களோ, வெளிப்பகட்டுக்களோ? இவைகளையெலாம் விளக்கி, என்னைத் தெளிவித்து உயர்த்தக்கூடிய புண்ணியபுருஷர் ஒருவருளராயின், வந்து எனக்குப் போதிப்பீர்!

நான் இல்லையானால், உலகமும் இல்லை; உலகின் இருப்பு, அல்லது தோற்றமும், உலகாதிகளின் சலனமும் போக்கும் என் புலனுணர்ச்சிகளையும் மனோவமைப்பையும் பொறுத்துள வன்றோ? என் உள்ளியக்கப் படியன்றோ பிரபஞ்சாதிகள் பெருகிச் சிறுகி, மாறி மறைவன? என் செவிகளை யடைப்பேனாயின், சப்தமும் தொனியும் கீதமும் கேட்கப்படுமோ, அவைகள் உள்ளனவாமோ? இறப்பேனாகில், என்னுடன் உலகமும் அழிகின்ற தன்றோ? வருந்தி வாடி ஏங்கி, மருண்டு திரிந்து படியும் ஜீவகோடிகளில் யானும் ஒருவனோ, பகர்வீர்!

என் புலனுணர்வாகிய கேடயத்தின்மீது வீசப்படும் சாயைகளோ உலகாதிகள்? என் இச்சைகளால் எழுப்பப்படும் உருக்களோ? என் அக இயக்கப் படிக்கு ஆடும் விநோதப் பதுமைகளோ? ஹா, என்ன களிப்பு, இழிய ஆர்ப்பாட்டங்கள், வீண் பிரயத்தினங்கள், பரிகசிக்கத்தக்க ஆரவாரங்கள்! என்ன மயக்கம், என்ன அகந்தை! என்னைத் தெளிவிப்பீர்! மனம் பாழ்த்து, புலன்கள் கெட்டு, அங்கந் தளர்ந்து தவிக்கின்றேன், ஈசா!

அன்ன விசார மதுவே விசார மதுவொழிந்தாற்
சொன்ன விசாரந் தொலையா விசார நற்றோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசார மிப்பாவிநெஞ்சுக்
கென்ன விசாரம் வைத்தாய்.

வாதுக்குச் சண்டைக்குப் போவார் வருவார் வழக்
[குரைப்பார்
தீதுக் குதவியுஞ் செய்திடு வார்தினந் தேடியொன்று
மாதுக் களித்து மயங்கிடு வார்விதி மாளுமட்டு
மேதுக் கிவர்பிறந் தார்

மூல மறியேன் முடியு முடிவறியேன்
ஞாலத்துட் பட்ட துயர்நாட நடுக்குதடா.

மண்ணுசைப் பட்டேனை மண்ணுண்டு போட்டதடா
பொன்னுசை பெண்ணுசை போகேனே யென்குதே.

மக்கள்சுற்றத் தாசை மறக்கேனே யென்குதே
திக்கரசா மாசையது தீரேனே யென்குதே.

ஐந்து புலனு மடங்கேனே யென்குதே
சிந்தை தவிக்கிறதுந் தேறேனே யென்குதே.

காமக் குரோதங் கடக்கேனே யென்குதே
நாமே யரசென்று நாடோறு மெண்ணுதே.

அச்ச மாங்கார மடங்கேனே யென்குதே
கைச்சு மின்னுமானங் கழலேனே யென்குதே.

புல்லாகிப் பூடாய்ப் புலர்ந்தநாள் போதாதோ
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ.

கிரியாய்க் கீடமாய்க் கெட்டநாள் போதாதோ
நீரியா யூர்வனவாய் நின்றநாள் போதாதோ.

பூதமொடு தேவருமாய்ப் போனநாள் போதாதோ
வேதனைசெய் தானவராய் வீழ்ந்தநாள் போதாதோ.
நோயுண்ண வேமெலிந்து நொந்தநாள் போதாதோ
ஊனவுடல் கூன்குருடா யுற்றநாள் போதாதோ.

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென்
[கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென்றெண் ணுமற் சுகமென்று நாடுமித் துற்புத்
யேதென் றெடுத்துரைப்பேன். [தியை

பொல்லா தவனெறிநில்லா தவனைம்புலன் கடமை
வெல்லா தவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற்
செல்லா தவனுண்மை சொல்லாதவனின் றிருவடிக்
பில்லா தவன்மண் ணிலேன் பிறந்தேன். [கன்

குலசேகரர்.

நடமாடும் கோவில்

திருவரங்கம் செல்லத்தொடங்கிய போதெல்லாம் திருமாலின் அடியார், எதிர்வந்தமையால், திருவரங்கச்செலவை நிறுத்திக்கொண்டனர் ஆழ்வார். ஏன்? திருமால் வழிபாட்டினும், திருமாலின் அடியார் வழிபாடு சிறந்ததென ஆழ்வார் எண்ணினராதலின், அன்றோ? தன் அடியார்களது அகத்தே ஒளிர்கின்றானாதலினால், அவனை அவ்வன்பர்களிடத்து நேரே காணலாம். எனவே, ஆண்டவனை வழிபடுவதினும் அடியாரை வழிபடுவது சிறந்ததாயிற்று. படமாடுங் கோயிலினும் நடமாடும் கோயிலே எவ்வகையினும் தலைசிறந்ததாகும். உயிர்களுக்குப் பணிசெய்வதே ஒப்பற்ற ஆண்டவனது திருப்பணியாகும். இதனை இவ்வகையில் முதன்முதல் நிலைநாட்டினவர் குலசேகரரே யாவர். திருமாலை வழிபடுவார் இன்றளவும் இக்கொள்கையைப் பின்பற்றுகின்றனர். ஆனால், அவர்கள் வழிபாடு "தேவர் திருமாளிகையிலிருந்து அடியேன் குடிலுக்கு எப்பொழுது எழுந்தருளுவீரோ'' என்று கூறுவதோடு நின்று விடுகின்றது. "வாயோ வாழைப்பழம்; கையோ கருணைக்கிழங்கு'', என்ற கதைதான் இவர்கள் கதை. உள்ளும் புறமும் ஒன்றுபட்டு, உயிர்களிடை ஆண்டவனைக் கண்டு, உவந்து, வழிபாடு செய்வதைத் திருமாலின் அடியவரிடைப்பரப்பியவர், குலசேகரரே ஆவர். அதுபற்றியே, "தேட்டருந்திறல்'' எனவரும் திருமொழியினைப் பெருமாள்திருமொழியிற் சிறந்ததென்று திருமாலை வழிபடுவோர் புகழ்வர்.

453 பக்கத் தொடர்ச்சி.

தேட்ட ருந்திறல் தேனி னைத்தென்
னரங்க னைத்திரு மாதுவாழ்
வாட்ட மில்வன மாலை மார்வனை
வாழ்த்தி மால்கொள் சிந்தையராய்
ஆட்ட மேவி அலர்ந்த ழைத்தயர்
வெய்து மெய்யடி யார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடு மேலது
காணும் கண்பய னவதே. 1.

[தேட்டரும் - தேடு+அரும் - தேடுதற்கு அரிய; திறல்- திறமையுடைய; வனமாலை - துளசிமாலை; மால்கொள் - பித்தேறின; அலர்ந்து - வாய்மலர்ந்து; ஈட்டம் - கூட்டம்]

தேட்டருந்திறல் தேனினை.

அவனருளாலே, அவன்தாள் வணங்குவ தல்லாது அவனைத் தேடியடைவதனை எங்கும் கேட்டறியோம். ஆனால், "காட்டுவித்தால் யார் ஒருவர் காணாதாரே. காண்பார் யார் கண்ணுதல் நீ காட்டாக்காலே''. நாடாது வந்து நலன் தருகின்றானை, நாட்டவரில் எளியவனோ இவன்? இவன் தந்துதவும் பொருள்கள் இழிந்தனவோ? அன்று, அன்று! பெருந்திறல் உடையான், பேரின்ப வீடே தரவல்ல பெரியான். அத்துணைப் பெரியோன் நமக்கு எளிவந்து, அருள்செய்தல், அவன் பேரருளினால் அன்றோ? வாய் மணக்கும் அவன் பெயரை, வழுத்துதொறும் அவனது திருப்பெயர், தேனினும் தித்திக்கும் தேனென இனிக்கும் திருமால், தேனென உடல் பற்றிய நோயொன்றினையே போக்குவான் அல்லன். ஒப்பற்றவனை ஒருகால் ஓதவும் வாயூறும், நாவூறும், உடல் குளிரும், மயிர் சிலிர்க்கும். உடலம் இன்பத்தில் மூழ்கலும். உடல் எல்லாம் ஓடும் குருதி நிறம்பிக மாறிச் சிறந்து பாயும். உயிர்ப்பும் தூயதாய்த் தென்றலென இன்பமாய் உலவும். அறிவும் தேனெனத் தெளிவுற்று இன்பமாகின்றது. வாயூறிய மாலின்பெயர் மனத்தே கசிந்து போய்ப் பாய்கின்றது. காய்ந்த பயிராய்க் கருகியஉயிரும் தளிர்க்கின்றது. தீமை எனும் கோடை ஒழிய நன்மை எனும் தேன்மாரி அங்குப் பொழிகின்றது. இன்பவெள்ளம் உள்ளத்தையும் ஊடுருவிச்சென்று உயிரைத் தாக்குகின்றது. தேன்மழை வெள்ளம், புரண்டோடி அறியாமையென்னும் அணையை மோதி அழிக்கின்றது; சிற்றுயிரை ஈர்த்துச் சென்று திருவடி நீழலில் சேர்க்கின்றது. திருவடிநீழலில் திருந்தி அமைந்தவருக்கும் பிறவிவெப்ப முண்டோ? திருவடி மலரில் தேனினை உண்டு சிற்றுயிரும் பேருயிராய்ச் சிற்றின்பம் மாறிப் பேரின்பத்தில் பிரிவின்றித் திளைக்கின்றது. வாயினும், நாவினும், உடலினும், உயிர்ப்பி

னும், அறிவினும், அகத்திலும், உயிரினும், உயிர்க்குள் ஒளியினும் பாய்கின்ற இத் தேனைப்போலத் திறல் விளங்கும் செம்பொருள் இவ்வுலகிலேனும் எவ்வுலகிலேனும் வேறு உண்டோ?

தேன்னரங்கனே

தேனும் மருந்தினை உண்டவர்க்குத் திருமாலின் செவ்வி சிறந்து திகழ்கின்றது. வாய்க்கு இனியான் ஆனவன் கண்ணுக்கும் இனியானை நம் அரங்கன்- (தென்-அழகு) அவனைக் காண வானத்தைக் கீறி மாலுலகடைய வேண்டாம். தேடிப்போனால் தேனகப் படாதன்றோ? அத்தேனே நம்மை நாடி நம் தென்னாட்டிற்குப் புகுந்து காவிரிவழியே திரு அரங்கத்தை அடைந்து அங்கே தேங்கி நின்றது. கருப்பஞ்சாறு கன்னற்கட்டியானதுபோலத் தேனைப் உலகெங்கும் பரந்தவன் உருவும் வடிவும் திரண்டு இன்பக் கட்டியாய் எதிரே நின்றான். தமிழரிடத்தும் தமிழ் நாட்டிடத்தும் அவனுக்கிருந்த அருளே அருள்.

திருமாதுவாழ் வாட்டமில் வனமாலை மார்வனே.

அவன் நமக்கு அருள்வானோ என்று அஞ்சுதல் ஒழிக. தண்ணருள் என்னும் தனிப்பெருந் தாயொடும் வந்துள்ளான் ஆதலின், அறிவெனும் தந்தை அடிப்பினும், அருளெனும் தாய் அணைப்பாள் அன்றோ? இன்பமேயானவன் ஏழையும் அல்லன்? உலகனைத்தும் அத் தண்ணருளின் அரிய செல்வமே ஆகும். அருளுருவான திருமாதும், அன்பு கொண்டு இணை பிரியாது அவன் மார்பிலே அழுந்திக் கிடக்கின்றாள் என்றால், அவனது பேரன்பினையும் பேரின்பத்தையும் பேசுவார் யார்? மனைவியால் வந்த மாண்போடு தானும் செல்வத்திற் றிளைப்பானாய் வனமாலை பூண்டு திகழ்கின்றான். இன்பக் கடலாய், அருள் வெளியாய் அறிவு மலையாய் அமைந்த அவ்வகன்ற மார்பின் ஊற்றின்பத்தினை உலகப்பெருந்தாய் ஒருத்தியே அறிந்தாள் அல்லள். எல்லோருக்கும் எளிதில் கைவரும் இவ்வூற்றின்பத்தினை ஓரறிவுயிராய்க் காட்டிற் பூத்த பச்சிலையுமன்றோ அறிந்து மகிழ்கின்றது. வனமாலை சிறிது வாடத் தொடங்குகின்றது. திருமேனி பட்டவுடனே தளிர்க்கின்றது. இவ்வாறு திருமேனியிற் றிளைப்பதால் எந்நாளும் வாட்டமில்லாது வாழ்கின்றது. அவன் எளிமை இருந்தவா றென்னே ? அவன் ஊற்றின்பம் இருந்தவா றென்னே ?

வாழ்த்தி.

தேனினுமினிய திருப்பெயரால் வாய்க்கு மினியானைத் தென்னரங்கனெனக் கண்ணுக்கும் இனியானை வனமாலையின் நறு நாற்றத்தோடு கடவுள் மணமும் கலந்து வீசுதலின் மூக்கிற்கு மினியானைப், வனமாலையும் வாடாது தளிர்க்கும் வண்ணம் ஊற்றிற்கும் இனியானைப் நின்றவன், காதினுக்கும் இனியானென்பதை நேரேகாட்ட அடியார் கூடிச் செவிக்கினிக்கும் திருமாலின் திருப்புகழைப் பாடுகின்றனர்.

வாயிலூறி மனத்திலூறி உயிரிலூறி உயிர்க்குள் அறிவிலூறி இன்பத்தேனைப் ஓரறிவுயிர்க்கும் வாடா நிலைதந்து பேரருட் பெருந்தாயோடு நம்மை நோக்கி நல்லருள்புரிய நம்மூர் தேடி வந்தவன்பால், திருமாது புல்லிநின்ற திறல் விளங்கும் மார்பகத்தே மரு உயிர்க்கும் வனமாலை பசுமணிபோல் வயங்குவதைக் கண்ணாரக்கண்டுகந்த காதலினால் மெய்யடியார் கண்ணெதிரே காண்பதுவும் கனவேயோ, நனவேயோ என்றே திகைத்து எதிரே நிற்பர். கனவாயினும் நனவாயினும் கண்ணெதிர் கண்ட கடவுளின் உருவம் காலமழியினும் அழியாது கடந்து நின்று எந்நாளும் இந்நாள்போல எழிலோடும் இன்பத்தோடும் உலகமெல்லாம் இன்பமுற ஒளி சிறந்து விளங்குக என்று பலரும் ஒருங்கே பல்லாண்டு கூறுவர்.

மால்கோள் சிந்தையராய்.

"வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டே" என்று வாழ்த்தும்போது ஒவ்வொரு சொல்லும் பொருளும் மனத்தகத்தே வேரூன்றி நிற்றலினால் "ஓவற இமைக்கும் சேண் விளங்கவிரொளி" ஓவற இமைக்கும் உள்ளத்தொளியுமாகின்றது. சிறந்தடியார் உள்ளத்தே தேனூறி நிற்பான் ஆதலின் அந்நிலையில் அவர்கள் உள்ளம் திருமால் கொண்ட உள்ளமாகின்றது (மால்கொள் - திருமால் கொண்ட.) பெரு மால் கொண்ட உள்ளமும் ஆகின்றது. (மால் கொள் - பித்தம் கொண்ட.) துன்பத்தில் நின்ற முன்னிலை மாறுகின்றனர்; இன்பப் பித்தேறி நிற்கின்றனர்.

ஆட்டம் மேவி.

உலகர், பித்தர் என்றேச ஏழுலகுண்ட இறைவனை உவப்புடன் உள்ளத்தே உண்டே ஒடுக்கிய இப்பெரியோர்கள் இன்ப உருவாயினர். ஆதலின் தம்மை மறந்து தம்மையும் அறியாது இன்பக் கூத்தாடுகின்றனர். ஆட்டம் இவர்களை மேவிற்றேயன்றி அடியார்கள் தாமே ஆட முன்வருகின்றனர் அல்லர். ஆண்டவனை அல்லாது அறியாது அவன்வழி நின்றவர்கள் முனைப்பொடு "இத்தொழில் செய்யவேண்டும்", "அத்தொழில் செய்யவேண்டும்" எனத் தாமே எண்ணுவதும் உண்டோ? இறைவனே இவர்களது உயிருக்குள்ளே புகுந்தானாதலின் அவன் இயக்கவே ஆடி நிற்பர். அன்பு இவர்களை யாட்ட இவர்களும் ஆடுவர்.

அலர்ந்தழைத்து

கண்ணெதிர் கண்டு வாழ்த்தினர்; மனத்தில் அவ்வொலி சென்று தாக்கவும் மால்கொண்ட மனத்தராய் ஆடினர். மனத்தகத்தானை நேரே காணக் கூவியழைக்கின்றனர். அவனை அழைக்கும்போது அவர்கள் வாய் இன்பத்தோடும் அன்போடும் அன்றலர்ந்த செந்தாமரைபோல விரிந்து நின்ற அழகினை என்னென்போம். அவர்கள் சொற்களும் மலர்ந்த சொற்கள். மலரிலிருந்து வரும் மணம்போல எங்கும் போய்ப் பரவி மலரில் நின்ற தேனென இனிக்கின்றன அச்சொற்கள்.

அயர்வெய்தும்.

இவ்வாறு ஆடிப்பாடி நின்றவர்கள் அவன் வரப் பெறுமையால் இளைத்து அறிவு குடிபோய் நின்று, தம்மை மறந்து தனித்து விளங்குவர். அன்பான கள்வன் அந்நிலையில் அவர்கள் உள்ளத்தே உவந்தருளி இன்பக் கலவியில் திளைத்திருப்பான்.

மெய்யடியார்.

இத்தகையார் உலகினை மருட்ட இவ்வாறு திரிகின்றனரோ? உள்ளம் போலப் புறமும் இறைவனது இன்பவடிவம் பொலிந்து ஒளிரும் ஒளிவட்டத்தோடும் நகைமுகத்தோடும் உவகையோடும் உலகை மறந்து உலவுகின்ற இப்பெரியோர் மெய்யான அடியவர்களே; மெய்யிலும் ஆண்டவனைக் காட்டும் அடியவர்களே. உண்மையே ஒழுக்கமாகக் கொண்ட உயர்ந்தோரே;

தம் ஈட்டம்.

யாம் பெற்றது இவ்வையமும் பெறுகவென வாழ்வோர் ஆதலின் அன்னோர், அழுக்காற்றினால் தனித்து நின்று பேய்போலும் புலிபோலும் களிப்பவர் அல்லர். அடியவரோடும் ஒன்றுசேர்ந்து உள்ளுருகி நிற்பதனையே ஒழுக்கமாகக் கொண்டவர்கள் ஆதலின் அவர்கள் மற்றைய அடியவர்களோ டளவளாவி நின்ற நிலையே அழகுடையதாம்; இன்ப வடிவினதாம்.

கண்டிடக் கூடுமே லதுகாணும் கண் பயனாவதே.

மறம் வளரும் மாநிலத்தே அறம் வளரும் அடியார்களைக் காணவும் கூடுமோ? அது கூடுமானால் அஃதன்றோ கண்படைத்ததன் பயனாகும். அழகினைக் காண ஆண்டவன் தந்த கண்கள் இதனினும் மிக்கதோர் அழகினைக் காணுதல் கூடுமோ? படமாடுங் கோயிலைப் பார்த்தென்னபயன்? கட்புலனாகக் கடவுளை அச்சட்டகம் காட்டுமோ காட்டாதோ? ஆனால் அடியவரிடத்தே அவனைக் காண்டலில் ஐயம் இல்லை. இறைவனைத் தனியே கண்டு என்பயன்? உலகிடை நின்ற நாம் உலகிடையே அவனைக் காணல் வேண்டும்; உயிரிடையே காணல் வேண்டும்; அடியவர்தம் உடல் குளிர உள்குளிர உயிர்குளிர உயிர்க்குள்ளூறும் அறிவுகுளிர இவர்களகத்தே அன்போடும் அழகோடும் பாய்ந்து உள்ளமே கோயிலாய் உவந்திருந்தபோது அவனொளி அவர்கள் உள்ளத்திருந்தும் புறத்தே எங்கும் வீசாதோ? அவர்களது திருக்கூத்தும் திருமொழியும் அவனிருப்பை அறிவியாவோ? அந்தக் கூத்தையும் இந்தக் கூதையும் கண்டு களித்துக் கருத்தழிவார் கடவுள் மெய்ப்பாட்டினைக் காட்டி அன்பர் ஆடும் திருக்கூத்தையும் அங்கெழும் கடவுட்சுவையினையும் கண்டு துய்த்து அந்த அழகுநிலையில் நில்லாரோ? அவ்வடியார் அந்த மாலவனை வாயார வாழ்த்தியும் வாவென்றழைத்தும் மால்கொண்டு நின்ற நிலையில் தண்ணந் தாமரைமலரெனத் தனியேமணந்து மலர்ந்தினிப்பதாய்த் தகைபெற்று விளங்கும் தவமுடை வாயினழகையும் அங்கு ஆய்ந்த சொற்கொண்டு அழைப்பதிற் பொலியும் அறிவுநிலையையும் காண வேண்டாமா? தம்மை மறந்து இன்பக் கலவியில் அவனோடமர்ந்து அவனேபோல அறிதுயிலமர்ந்த இன்பநிலையினைக் காணவேண்டாமா? அடியார்கள் கூட்டமாய்க்கூடி அளவளாவி நிற்கும் அன்புநிலையினைக் காணவேண்டாமா? இவற்றினை ஒருங்கே இவ்வாறு கண்ட கண்ணன்றோ கண். படமாடுங்கோயிலை விட்டு உள்ளமெனும் நடமாடுங் கோயிலில் புகுந்து அன்பினிற் காய்ச்சி எடுத்த இன்பநெய்யில் தோய்ந்த அறத்திரி நுனியில் எரியும் அழகெனுந் தீயின் அறிவெனும் சுடரொளியாம் ஆண்டவனைக் காணாத கண் என்ன கண்ணோ!

அப்பர்

4. பெரியபுராணத்தில் காணாத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்.

2. தஞ்சைஜில்லாத் திருப்பதிகளின் முற்பகுதி. சீர்காழியில் அப்பர் பாடியது முதல் திருப்பழையாறையில் சமணழித்த வரையில்.

VI ஆறும் தொகுதி

இனி அப்பர் திருப்பழனத்தினின்று சென்றிருக்கக் கூடிய திருப்பதிகள் சிலஉள. * அவையாவன:— (26) திருக்கண்டியூர் † (27) திருவேதிகுடி ‡ (28) திருவாலம் பொழில் $ (29) திருக்கானூர் ¶ (30) திரு அன்பிலாலந்துறை என்பன §.

(26) திருக்கண்டியூர்.— இதைத் திருக்கண்டியூர் வீரட்டமென்று * சம்பந்தர் அழைப்பார். இத்திருப்பதியில் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும் அப்பர்

* எழும்பணியும் இளம்பிறையு
மணிந்தவரை எம்மருங்கும்
தொழும்பணிமேற் கொண்டருளித்
திருச்சோற்றுத் துறைமுதலாத்
தழும்புறுகேண் மையினண்ணித்
தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயிற்
றிருத்தொண்டு செய்திருந்தார்.

—திருநாவுக்கரசு நாயனார் புராணம், 212.

† தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து வடக்கே கற்சாலை மார்க்கமாய் 6 மைலில் திருக்கண்டியூர் இருக்கிறது. இதினின்று மேற்கே 2 மைலில் திருப்பூந்துருத்தியிருப்பதால், அப்பர் திருப்பூந்துருத்தியிலிருந்த காலத்திலும் இதைத் தரிசித்திருக்கலாம்.

‡ திருக்கண்டியூரினின்று கிழக்கே 1½ மைலில் திருவேதிகுடி யிருக்கிறது. இதினின்று வடக்கே கரைமார்க்கமாய் 2 மைலில் திருச்சோற்றுத் துறை இருப்பதால், அங்குச் சென்றபோது அப்பர் இங்கும் சென்றிருக்கலாம். மேற்கண்ட பெரியபுராணச் செய்யுளாலறிக.

$ திருக்கண்டியூருக்கு 2மைலில் திருப்பூந்துருத்தி. அதினின்று மேற்கே ஒரு மைலில் திருவாலம்பொழிலு மிருக்கின்றது. திருப்பூந்துருத்தி வந்தகாலத்தில் அப்பர் இங்குச் சென்றிருக்கலாகாதோ வெனில், பெரியபுராண வரலாறு அவ்வாறு உரையிற் கோடலுக்கு இடங்கொடுக்கவில்லை.

¶ பூதலூர் ஸ்டேஷனுக்குவடக்கே கற்சாலைமார்க்கமாய் 4 மைலில் திருக்காட்டுப்பள்ளியும், இதினின்று வடக்கே 2 மைலில் திருக்கானூரும் இருக்கின்றன.

§ திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே காவிரி வடகரையாய் 5 மைலிலுள்ள கோயிலடியினின்று வடக்கே 2 மையில் கொள்ளிடம் வடகரையில் (கொள்ளிடத்திற்குப் பரிசு) அன்பிலாலந்துறை யிருக்கிறது.

* இது காவிரி யாற்றங்கரையிலுள்ள ஸ்தலமாதலால் நீர்வளம் பெற்றது. அக்காலத்தில் கரியமண் (Black Cotten soil) காணப்படும் வயல்களையுடைய தென்றும் அறிகின்றோம்.

திருவிருத்தப்பதிகம் ஒன்றும் திருமுறைகளிற் காணலாம்†. சிவபெருமான் திருவடியை வணங்குவதுமூட பக்தியன்றெனவும், அறிவியல் நூல்களாய் விளங்கும் அறுவகைச் சாத்திரங்களின் ஆராய்ச்சி முடிவு அத்திருவடியென்றும், அங்ஙனம்கூறும் நமது சமய வேதம் ஊனமில்லா வேதமென்றும், அவ்வேதமே சிவபெருமான் படையென்றும் அப்பர்பதிகம்கூறும்.‡

(27) திருவேதிகுடி:—இத்திருப்பதியில் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் திருவிருத்தப் பதிகம் ஒன்றும், திருமுறைகளி லிருக்கின்றன. இவை நடை பண் முதலியவற்றில் பேதப்படினும், ஒருவரோடொருவர் கலந்து பாடிய பதிகங்கள்போல் காணப்படுகின்றன. * சிவபெருமான் திருக்கைகளில் விளங்கும் சூலம் அனல் மறி முதலியன வேந்திய திருவங்க இலக்கணமே, அப்பர் திருவிருத்தத்திலும் சம்பந்தர் பதிகத்திலும் வெவ்வேறு விதங்களாய்ப் பாடப்பட்டிருக்கின்றன. இத்தகைய வண்ணமே சிவபெருமான் அப்பருக்கு † ஆராவமுதாய் விளங்கிய திருவேதிகுடி என்னும் "தொல்லை நகர்" தன்னைப் புகழ்வதுபோல் பரமசிவத் திருவங்கவர்ணனைக் காழியார்கோன் பதிகத்திலும் விளங்கும் ‡.

(28) திருவாலம்பொழில்:— இது தென்பரம்பைக் குடியிலுள்ள ஆலமரங்கள் நிறைந்த ஒரு பொழிலென நாம் அப்பர் தேவாரத்தா லறிகிறோம். அப்பர் பாடிய பதிகம் ஒன்றே இப்பதியின்மேல் தேவாரமாம். அப்பதிகத்திலும் 10-ம் செய்யுள் மறைந்தது. ஏனைய ஒன்பது செய்யுளும் நவரத்தினங்கள்போல் விளங்குகின்றன. எப்பொருட்கும் கருவாய் நின்ற கண்ணுதலை, ஏ நெஞ்சமே! நீ சிந்திப்பாயாக வென்று மனதைநோக்கி இப்பதிகம் முற்றும் பாடப்பட்டது.† எம்பெருமானென் றடைந்தவர்களுக்குத் திருவீன்றவனும், வாராதவடியார்க்கு வாரானுமாகி, வஞ்சனை செய்வார்க்கு வஞ்சனுகும் சீரையுடைய பேரரசு எவ்வெப்பதிகளில் வீற்றிருக்கின்றுரென்பதும் இப்பதிகம் விளக்கும். இப்பதிகத்தில் கண்டிருக்கும் திருப்பதிகள், அப்பர் தரிசித்ததும் தரிசிக்க எண்ணியிருந்தது மென்னலாம். இதில் பரம்பொருள் பிறப்பு இறப்பு இவற்றினுள்ளும் நின்றவனெனவும், தன்னைப் புறம் புறமே சோதித்த புனிதனெனவும் அப்பர் பாடினர்.

(29) திருக்கானூர்:—இப்பதியில் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும் திருமுறைகளில் உள. இந்நகர் சித்தர் பத்தர்கள் சேர் இடமென்றும், செல்வமல்கும் பதியென்றும், பெரிய மதிலைப் பெற்றதென்றும், புண்டரீகப் பொதும்புடையதென்றும் அப்பர் திருவாக்கா லறிகின்றோம். திருஞானசம்பந்தரும் பூஞ்சோலைகள் நிறைந்த நகரென மொழிகின்றனர் *.

அப்பர் இப்பதியிற் பாடிய திருக்குறுந்தொகை முதற்செய்யுள் திருவினுள் கொழுநன் முதலானோர் உற்பத்திக்கிடமாய பரஞ்சுடர் காண், எனப் பொதுப்படையிற் கூறியதை ஏனைய செய்யுள்கள் வகுத்துக் காட்டும் சிறப்புச் செய்யுள்களென்னலாம். 2-ம் செய்யுள், பெண்டு பிள்ளை, பந்து பதார்த்தம் இவற்றைக் கண்டு உவக்கலாகதென்றும், 3-ம் பாசுரம் தாயத்தார், தமர், நன்னிதி யென்பன மாய மென்றும், அவற்றில் மயங்கலாகா தென்றும், கூறும். அத்தகைய வினைக்காளாக்கும் சமண்நெறியைத் தான்விட்டுச்சிவன்கழல் பற்றியதால் சிந்தை செறிவடைந்த தென்றும், 4-ம் பாசுரத்தி லறிவிக்கின்றூர். 5-ம் பாசுரத்தில் நமது தேகம் "பொத்தலையுடைய மண்சுவர்ப் பொல்லாக் குரம்பை" யென்றும் இதையும் வியக்கலாகாதென்பர் வாகீசர். 6-ம் செய்யுள் கல்விஞானப் பொருளாயவனை, எல்லியும் பகலும் இசைவானவாறு சொல்லுங்களென்கின்றது. 7-ம் பாசுரம் பரமன் ஊனூர் திரிவதற்குக் காரணம் விளக்குவதுபோல் 8-ம்செய்யுளும் "வீமப்பே ரொளியாய விழுப்பொருள்" செய்கைகளைக் காட்டும்.

இப்பதிகத்தின் 9-ம் பாசுரம் மறைந்தது. 10-ம் பாசுரம் சிவபெருமான் கருணையை விளக்கும்

(30) திருஅன்பிலாலந்துறை:— இதில் அப்பர் பாடிய 10 செய்யுளடங்கிய ஒரு திருக்குறுந்தொகை திருப்பதிகமும், திருஞான சம்பந்தர் பதிகமொன்றும் திருமுறைகளிற் காணலாம். அப்பர் திருக்குறுந்தொகை முடிவில் "எம்பெருமான் அன்பிலாயந்துறை வலங்கொள்வாரை வானோர் வலங்கொள்வரே" என்பதைச் சம்பந்தர் பதிகம் பற்பல விதமாய்ப் பதியின் சிறப்பை விளக்கிக் காட்டும்.

கறைமிடற் றண்ணல் நஞ்சுண்டமையே அன்பின் வடிவென்பதற்கு அத்தாட்சி என்று எடுத்துக்காட்டும் இப்பதிகத்தின் மூன்றும் செய்யுள், அன்பன்றி வேறு வழியால் பரம்பொருளை யறியலாகாதென்று எடுத்து விளக்கும். ஆதலால், "சங்கை யுள்ளதும் சாவதும்" மெய்யாயினும், உமைபங்கனடிபரவுதலால் நாம் அவரை யறிய, அவர் "நம்மையறிய"வும் நேருமென்றும், உள்ளவாறு பரம்பொருளை யறியாதார் ஊமரென்றும் மற்றைய செய்யுட்களிற் காணலாம்.

இக்காலத்திய பதிகங்களில் அப்பர் பதிகத்திற்கு ஒருமுறை சமணமதக் கண்டனை கூறுகின்றூர். இப்பதிக்கும் இதற்குச் சுற்றிலுள்ள இவர் பதிகம்பெற்ற திருப்பதிகளுக்கும் சமணமதச் சம்பந்தம் * முன் எவ்வாறிருந்த தென்பது, இனிவரும் அறிஞர் ஆராய்ச்சி செய்வதற்கு இடங்கொடுக்கின்றது. அப்பர் சமண வுறவைப்பற்றிய விஷயங்கள் சைவநூல்களிற் புலப்படவில்லையெனினும், ஆராய்ச்சியிற் புகுவதே நன்று.

† விரவிலாதுமைக் கேட்கின்றேனடி
விரும்பியாட்செய்வீர் விளம்புமின்
கரையெலாந்திரை மண்டுகாவிரிக்
கண்டியூருறை வீரட்டன்
முரவமொந்தை முழாவொலிக்க
முழங்குபேயொடுங் கூடிப்போய்ப்
பரவுவானவர்க் காகவார்கடல்
நஞ்சமுண்ட பரிசதே.
—சம்பந்தர்

‡(i) மாய்ந்தன தீவினை மயங்கின நோய்கண் மறுகிவிழத்
தேய்ந்தன பாவஞ் செறுக்கி லாநமைச் செற்றநங்கைக்
காய்ந்தபி ரான்கண்டி யூரெம்பி ரானங்க மாறினையும்
ஆய்ந்தபி ரானல்ல னேவடி யேனையாட் கொண்டவனே
—திருக்கண்டியூர்-திருவிருத்தம்: 9.

(ii) காவிரியின் கரைக்கண்டி வீரட் டானம்
கடவூர்வீ ரட்டானங் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவனகர் வீரட்டங் குறுக்கை வீரட்டங்
கோத்திட்டை குடிவீரட் டான மிவைகூறி
நாவினவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்றமரும் சிவன்றமரென் றகல்வர் நன்கே.
—அடைவு திருத்தாண்டகம் 2.

* பத்தர்க ளோடு மறவார் பிறவியை யொன்றறுப்பான்
முத்தர்கண் முன்னம் பணிசெய்து பாரிட முன்னுயர்ந்
கொத்தன கொன்றை மணங்கம ழுந்திரு வேதிகுடி [தான்
அத்தனை யாரா வமுதினை நாமடைந் தாடுதுமே
—அப்பர் - திருவிருத்தம்—4.

உன்னியிரு போதுமடி பேணுமடி
யார்தமிட ரொல்கவருளித்
துன்னியொரு நால்வருட னுனிழலி
ருந்ததுணை வன்றனிடமாம்
கன்னியரொ டாடவர்கண் மாமணம்வி
ரும்பியரு மங்கலமிக
மின்னியலு நுண்ணிடைநன்
மங்கையரி யற்றுபதி வேதிகுடியே.
—சம்ந்தர்-திருவேதிகுடி, பண்-சாதாரி 7.

† கைத்தலை மான்மறி யேந்திய கையன் கனன்மழுவன்
பொய்த்தலை யேந்திநற் பூதிய ணிந்து பலிதிரிவான்
செய்த்தலை வாளைகள் பாய்ந்துக ளுந்திரு வேதிகுடி
அத்தனை யாரா வமுதினை நாமடைந் தாடுதுமே.
—அப்பர், திருவிருத்தம்—2.

‡ போழுமதி பூணரவு கொன்றைமலர்
துன்று சடை வென்றிபுகமேல்
வாழுநதி தாழுமரு ளாளரிரு
ளார்மிடறர் மாதரிமையோர்
சூழுமிர வாளர்திரு மார்பில்விரி
நூலர்வரி தோலருடைமேல்
வேழவுரி போர்வையினர் மேவுபதி
யென்பர்திரு வேதிகுடியே
—சம்ந்தர்- 3.

† விரிந்தானைக் குவிந்தானை வேத வித்தை
வியன்பிறப்போ டிறப்பாகி நின்றான் றன்னை
அரிந்தானைச் சலந்தரன்ற னுடலம் வேறா
வாழ்கடனஞ் சுண்டிமையோர் ரெல்லா முய்யப்
பரிந்தானைப் பல்லசுரர் புரங்கண் மூன்றும்
பாழ்படுப்பான் சிலைமலைநா ணேற்றி யம்பு
தெரிந்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே!
—திருவாலம்பொழில்-திருத்தாண்டகம் 6.

* தமிழினீர்மை பேசித்தாளம் வீணைபண்ணி நல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிட மோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையது கொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே!
—சம்பந்தர், திருக்கானூர்-பண்-தக்கேசி 8.

* பிறவி மாயப் பிணக்கி லழுந்தினும்
உறவெ லாஞ்சிந்தித் துன்னி யுகவாதே
அறவ னெம்பிரான் அன்பிலா லந்துறை
மறவா தேதொழு தேத்தி வணங்குமே.
—திருஅன்பிலாலந்துறை - திருக்குறுந்தொகை.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

13. எழுச்சிப் படலம்.

457 பக்கத் தொடர்ச்சி

ஊதியந் தருமோரு காதலி னுக்கம்
விடையெனப் பிடியென இளைஞரு மகளிரு மிடமிலை
யுலகினிலெனமிக மிடைபவர் செலலுறும் நெறி
யினில் அகம்நெகிழ் தொழிலவை பல
பல நிகழ்ந்தன. காதலின் புதுமையைச்
சிலர் கருத்துட் கொண்டனர். கருதிய
குறிகளைக் கண்ணிற் போக்கினர்.
மொழிசில பயில்வான் செவ்விநனி நோக்கினர்.

எய்திய செவ்வியி லியம்புதற்கியன்ற உரையும் தேர்ந்தனர். முன், இராமன் வல்வில் இறுப்பதன் முன்னம் சேயிழை மங்கையர் சிந்தைதொ றெய்யா ஆயிரம் வில்லை அனங்கன் இறுத்தான், என்று கம்பர் கூறினர். இங்கு, அவ்விராகவன் கடிமண மொன்று முடிவதன் முன்னம், அதனைக் காணுமாறு வழிக்கொண்ட இவ்வயோத்திமக்கள் ஆயிரம் மணங்களை தம்முள் முடித்துக்கொண்டனர். இவ்வரிய நிலையின் இனிமையைக் கம்பர், 'கண்டவர் மனங்கள் காதலினுல் கைகோப்ப'ச் சென்ற செவ்வியதென நயமுறக் காட்டுகின்றூர். இவ்வாறு மனம், கை கோப்பதால் கால்களுக்கோ வேலை அதிகமாகின்றது. வண்டியிற் செல்வாளொரு வனிதையைக் காமுற்ற காளை அவளருள் பெறுமாறு விரைந்து தொடர்கின்றனன். காலிளைத்த தெனினும் அவள் மனத்துடன் பிணைத்திருந்த கையோ நெகிழ்ந்ததில்லை. மற்றுக் காதலின் ஊக்கத்தளவு கால்கள் தளராதிருத்த லருமை. இனி இதற்கு ஊதியந்தான் எய்துமோவெனும் ஏக்கமுமுடைய னுயினுன். இதனைக் கம்பர்,

பாண்டிலின் வைத்தவோர் பாவை தன்னொடும்
ஈண்டிய வன்பின னேகு வானிடைக்
காண்டலு நோக்கிய கடைக்க ணஞ்சனம்
ஆண்டகைக் கினியதோ ரமுத மாயதே.

[குதிரை வண்டியில் வைத்திருந்த வொரு பதுமை போன்றவளுடன் நெருங்கிய அன்புடையவனுகப் போகின்றவனை அவன் திரும்பிப் பார்த்ததும், பார்த்த அக்கடைக் கண்ணில் எழுதிய மையானது அப் புருடனுக்கு இனிய அமிர்தம் ஆயிற்று]

என்று கூறிக்காட்டினுர். பின்னிவன் தொடர்ந்து வருவதை உணர்ந்திருந்து மவள் திரும்பிப்பார்த்தலின்றி நெடுநேரம் தாழ்ந்தாளாதலின் அவளைப் 'பாண்டிலின் வைத்த பாவை' என்றது தக்கதாயது. எனினும், இன்னவாறு துன்புறு மன்னுன் தன்மையைத்தெரிந்து கொள்ள நினைத்த வவள் தன் கடைக்கண்நோக்கம் எறிதலும், அதனிற்கே காத்திருந்த அவன் அமுதருந்தினுலென்ன வாட்டந்தீர்ந்தான். இனிஎன், உலகேழுமப் பாண்டிலின்பின் ஓடித்தான் திரியானே!

வண்டியைத் தொடர்வதினு மரிது குதிரையோடு விரைந்து செல்லல். பரியிற் சென்றுளொரு பெண்ணைக் காமுற்று அயலகலா துடன்போகிய செம்மலுக்குக் கட்டத்திற்கேற்ற பலன் கைம்மேல் கிடைத்த பரிசு இதுவெனக் கம்பர்,

சுழிகொள் வாம்பரி துள்ளவோர் தோகையாள்
வழுவி வீழலுற் றுளையோர் வள்ளறான்
எழுவி னீள்புயத் தாலெடுத் தேந்தினுன்
தழுவி நின்றெழி யான்றரை மேல்வையான்.

[நல்ல சுழியைக் கொண்டதும் பாய்ந்து செல்வதுமாய குதிரை துள்ளவும் அதன் மீதிருந்த மயில்போல்பவள் வழுவி விழுவாளாக, அவள் பக்கத்தில் சென்ற ஒருவள்ளல் தன் தூண்போன்ற நீண்ட புயங்களில் ஏந்திக்கொண்டவனுகித் தழுவிய வண்ணம் நின்றானேயன்றி அவளைத் தரையில் விட்டானல்லன்.]

என்னுமோர்சித்திரந் தீட்டிக்காட்டினுர். துள்ளியகுதிரையின்மதத்தின் மிகுதியோ, தோகையிவள் பரிமாக்கல்வியின் குறைவோ; அருகிருந்தோன் செய்திருந்த தவமேதானே அவள் வழுவி வீழலுற்றது! எழுவின் நீள்புயத்தான் அவ்வள்ளல்அயலங்கு நின்றிரானுயின், குதிரையுந் துள்ளுதல் செய்திராது; துள்ளினும்

வழுவி இவள் வீழ்ந்திராள். விழைதலும் விழுவதும் குறித்து அவ் 'வீழ்' என்னும் பதம் நிற்கின்றது. வீழ்வாரைத் தாங்குவது வள்ளலின் தன்மை.

தாரகமும் பாண்டிலுந் தொடர்ந்து சென்றாரில் ஒருவன் பாவையைப் பெற்றான், மற்றவன் அப்பாவையின் பார்வையே பெற்றான். காலைக்கும்பிட்டு இவர் தம் காதலுக்குக் கதி தேடினர். வாயுள்ள பிள்ளைகள் சிலர் ஓடியலைகின்ற வருத்தமின்றி வனிதையரை வம்பிற் கிழுத்தே பிழைக்கும்வழி தேடிக்கொள்வா ராயினர்.

தரங்க வார்குழற் றாமரைச் சீறடிக்
கருங்கண் வாளுடை யாளையோர் காளைதான்
நெருங்கு பூண்முலை நீள்வளைத் தோளினிர்
மருங்கு லெங்கு மறந்தது நீரென்றான்.

[அலைபோன்ற நீண்ட கூந்தலையும், தாமரைபோன்ற சிறிய பாதங்களையும், வாள்போன்ற கருங் கண்களையும் உடைய ஒருத்தியை இளையவன் ஒருவன், "நெருங்கிய ஆபரணங் களணிந்த முலைகளையும், நீண்ட வளையல்களையணிந்த தோள்களையு முடையவரே, நீர் இடுப்பை எங்கே மறந்து வைத்து வந்து விட்டீர்" என்றான்]

பரிகசம்பற்றி வந்த பன்மைபோலும் இது. இவ்விதம் தன் இடையின் நுண்மையைக் குறித்து நயப்புரைத் தசதியாடிய வச்செம்மலிற் கிவள் எதிருரைத்தது யாதென அறிகிலேம். "ஐய, மறந்ததும் ஓர் நன்மைக்கே யாயிற்று" என்று இயம்பினளெனின் அமையும். வாய்வலான் வேறொருவன் மற்றோரிடத்தில்,

கூற்றம் போலுங் கொலைக்கண்ணி னலன்றி
மாற்றம் பேசுகி லாளையோர் வள்ளறான்
ஆற்று நீரிடை யங்கைக ளாலெடுத்
தேற்று வாருமை யாவர்கொ லோவென்றான்.

[எமன் போன்ற தன் கண்சாடை காட்டுவதல்லாமல் வார்த்தை யொன்றும் பேசாதாள் ஆன ஒருத்தியை ஒரு வள்ளல், "ஆற்றைக் கடக்க வேண்டி வரும்போது உங்களைக் கையால்தாங்கி மறுகரை சேர்ப்பதற்கு யார் இருக்கின்றார்?" என்று கூறினான்]

"நின் மொழியெனும் அமுதினால் என்னுயிரைத் தளிர்க்கவையாயேல், நினது கண் பார்வையால் யான் அழிவேன். யானழிந்தபின் ஆற்றின்கண் உனக்கு உதவுவார் இலராவர். அதனை அறிந்து ஏற்றவாறு ஒழுகுக" என்னுங் கருத்துடன் இவன் இது பேசினான் என்பதோடு, அவட்கு அங்ஙனம் வேறு ஒருவன் உண்டோ இல்லையோ என்று அறியுமாறு இதுகேட்டான் என ஐயுறுவதும் அமையும். பொது நலத் தொண்டுகளில் ஈடுபடுவோர் ஊக்கத்தின் தன்னலமற்ற நோக்கம் இத்துணைத்து.

காலின் வேகத்தாலும் வாயின்வம்பினாலும்முயன்ற சிற்சில ரங்குத்தம் மனங்கவர்ந்த மங்கைமார் உறவின் நலங்களை எய்தி மகிழ, அவ்விரண்டு மற்றாராகி, உன்னியதை விளம்பும் வகையிலா ஊமரின் மாழ்கியோர் இரண்டொருவரும் இருந்தனர்.

துணைத்த தாமரை நோவத் தொடர்ந்தடர்
கணைக்க ருங்கணி னாளையோர் காளைதான்
பணைத்த வெம்முலைப் பாய்மத யானையை
அணைக்க நங்கைக் ககலிட மில்லென்றான்.

[தாமரை மலர்போன்ற இரண்டுபாதங்களும் நோவத் தொடர்ந்து, போர்செய்கின்ற அம்புகள் அனைய கண்களையுடைய ஒருத்தியைக் கண்டு, காளைபோல்வான் ஒருவன், "பருத்த வெம் முலைகளாகிய கொம்புகளுடையதாய்ப் பாய்கின்ற இந்த மதயானையை அணைப்பதற்கு ஏற்ற அகலம் நம் கைக்கு இல்லை" என்று அவள் முலையையும்தன் கையையும் நோக்கிநோக்கி ஒப்புக்கூறிக்கொண்டனன்.]

சுழியுங் குஞ்சி மிசைச்சுரும் பார்த்திடப்
பொழியு மும்மத யானையிற் போகின்றான்
கழிய கூரிய வென்றொரு காரிகை
விழியை நோக்கித்தன் வேலையு நோக்கினான்.

[சுருண்ட குஞ்சிமீது வண்டுகள் ஒலிக்க மும்மதம் பொழிகின்ற யானைபோல் போவான் ஒருவன், ஒருநங்கையின் விழியினைநோக்கித் தன் கையிருந்த வேலையும் நோக்கி முன்னது கூர்மை மிகுந்தது என்று எண்ணினான்]

மாதர் பின் ஓடினார்சிலர்; அவருடன் உரையாடினார் சிலர்; நோக்கி நோக்கி ஒப்பு நாடினார் சிலர். செய்கலொன்று மாற்றாது முற்றும் பரவசமாய்,

மண்க ளிப்ப நடப்பவர் வாண்முக
ஒண்க ளிக்கம லங்களி னுள்ளுறை
திண்க ளிச்சிறு தும்பி யெனச்சிலர்
கண்க ளித்தன காமன் களிக்கவே

['இன்னவர் என்மீது நடப்பதற்கு என்ன பாக்கியம் செய்தேனோ' என்று நிலமகளும் மகிழும் வண்ணம் நடந்த மாதர்களது ஒளி பொருந்திய முகங்களை நோக்கி மொய்த்த சில ஆடவர்களது கண்கள், நிறமமைந்த தேன்பொருந்திய தாமரையினுள் மொய்க்கும் வண்டுகளைப்போல் களித்தன. இத்தகைய உன்மத்தர்களைக்கண்டு இப்பொழுதேதான் முழு வெற்றியும் பெற்றோனென மன்மதன் களிப்படைந்தான்]

தெரிவையர் தம்மைச் சூழ்வரச் செல்லுதற்கவாவிய விடையனார் சிலர் செய்த வுபாயம் செவ்விதே.

சந்த வார்குழல் சோர்பவை தாங்கலார்
சிந்து மேகலை சிந்தையுஞ் செய்கலார்
எந்தை வில்லிறுத் தானெனு மின்சொலை
மைந்தர் பேச மனங்களித் தோடுவார்.

['எமது அண்ணல் இராமன் வில்லிறுத்தான்' என்ற செய்தியை மைந்தர் செப்புந் தோறும் அதைக் கேட்கும் பொருட்டு மாதர்கள் எங்கிருப்பினும், தம்சாந்தணிந்தநீண்ட கூந்தல் சோர்வதையுந் தாங்காராய், உதிர்கின்ற மேகலையையுங் கருதாராய், களித்த மனத்தோடு அவர்மாட்டு ஓடுவார்]

இராமன் வில்லிறுத்தான் என்னுமச் சொல் அன்று அவர்கட்குப் புதிய தன்று. எனினும் நவில் தொறும் நயம் நல்கும் நூலின் தன்மையையே அவர்க்கு அச் சொற்கள் காட்டின. தெவிட்டா விருந்தென இதனைக் கொண்டனர்.

இவ்வகை நங்கையரை நெருங்கி வந்தவர் பலராக அந்தாணையுள் அகலப்போனவரும் சிலர் இருந்தனர். அவர்களுள் காரிகையாரை அடைய வஞ்சி முந்தின அந்தண ரொருசாரார். மற்று,

முருக்கிதழ் முத்த மூரல்
முறுவலர் முகங்க ளென்னும்
திருக்கிளர் கமலப் போதிற்
றீட்டின கிடந்த கூர்வாள்
நெருங்கிடை யறுக்கு நீக
ணீங்குமி னீங்கு மென்றென்
றருக்கனி லொளிரு மேனி
யாடவ ரகலப் போவார்

[முருக்கம்பூவைப் போன்ற வாயையும், முத்துக்கள் போன்ற பற்களையும், புன்சிரிப்பையுங் கொண்ட மாதராருடைய முகங்களாகிய லக்ஷ்மி விளங்குகின்ற தாமரையில் தங்கிய கூரிய கண்களாகிய வாள்கள் இடையில் நெருக்கி அறுக்கும்; ஆகையால், நீங்கள் விலகுங்கள் விலகுங்கள்' என்று அகலப்போகும், சூரியன்போல் பொலிகின்ற மேனியுடைய ஆடவர்கள்]

அங்குச் சிலர் காணப்பெற்றனர். அந்தணர் தம்மையே நம்பாது அஞ்சி விலகினர்; இம்மைந்தர்களோ மாதர்க்கு அஞ்சி விலகினர். இதுவே வேறுபாடு.

வர்த்தமானம்

அமனுல்லாகானுக்குப் பெண் குழந்தை:—பட்டந் துறந்த அமனுல்லாகான் மனைவி சௌரியாராணி சென்றவாரம் பம்பாய் ஆஸ்பத்திரியில் பெண் குழந்தை பெற்றார். குழந்தையும் தாயும் சுகமே இருந்து வருகின்றனர் என்று பம்பாய்ச்செய்தி கூறுகின்றது.

***

ஸ்ரீ இராமாநந்த சட்டார்ஜி கைதியானார்.—மாடர்ன் ரெவ்யு பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ இராமாநந்த சட்டார்ஜி அவர்கள், ஸ்ரீ சுந்தர்லால் எழுதிய புத்தகமொன்றைப் பிரசுரம் செய்ததற்காக இராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைதியானார். பிறகு ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

***

காளஹஸ்தியில் தீவிபத்து:— ஜூன்மாதம் 6-ந் தேதியன்று காளஹஸ்தியில் ஒரு வீட்டினில் தீவிபத்து ஏற்பட 130 வீடுகள் எரிந்துபோயின. ஏழைகள் பலர் வீடில்லாது வருந்துகின்றனர். மாலை 4-மணிக்குப் பற்றிய தீ இரவு 7-மணிக்கு அவிக்கப்பட்டது.

***

பர்மாப் பிரிவினை:— லண்டனில் பர்மியர் கூட்டமொன்றில் லார்ட் ரீடிங் பிரபு தலைமை வகித்துக் கூறியதாவது:—பர்மாவின் பாதுகாப்பு நன்மைக்குச் சிறப்பாய் இந்தியாவின் கூட்டுறவுவேண்டும். இதுபோது பர்மாவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இந்தியா அதிகம் உதவியுள்ளது. ஆகவே பர்மாவை இந்தியாவினின்று பிரித்துவிடல் நல்லதன்று.

***

வாராந்த வர்த்தமானி:— பாளையங் கோட்டையில் ஆரம்பிக்கப் பெற்றிருக்கும் வாராந்த வர்த்தமானி என்னும் தேசீய வாரப் பத்திரிகையின் முதலிதழ் கிடைத்தது. வகுப்புக்கட்சி பேதமின்றி உள்ளதை உள்ளவாறுஉரைத்துத் தேசமுன்னேற்றத்தைக்கோருமிப்பத்திரிகையென அறியலாகின்றோம். ஸ்ரீமான் டி. கே. முத்தையா என்பார் இப்பத்திரிகையின் ஆசிரியர். வருஷசந்தா ரூ. 4.

***

காலஞ்சென்ற இராமசந்திர தோண்டைமான்: — ஜூன்மாதம் 7-ந்தேதி வெளியான புதுக்கோட்டை சமஸ்தான கெஸட் கூறுவதாவது:— புதுக்கோட்டை ராஜவம்சத்தைச்சேர்ந்த இராமச்சந்திர தொண்டைமான் அவர்கள் மேமாதக்கடைசியில் புதுச்சேரியில் காலஞ்சென்ற செய்தியைக் கேட்டுப் புதுக்கோட்டை அரச வம்சத்தார் வருந்துகின்றனர். அன்னவர் மரணத்தைக் குறித்து அரசாங்க ஸ்தலங்களும் மற்றப் பொது ஸ்தாபனங்களும் மூடப்பட்டன.

***

சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கம் வெளியிட்டுள்ள, புஸ்தகாலயத்திற்குரிய தமிழ் நூல்களின் முதல் அட்டவணை எமது பார்வைக்கு அனுப்பப் பெற்றோம். அதனில் பாட புஸ்தகங்கள்முதல் பத்திரிகைகள் அகராதிகள் ஈறாக, உண்மையாக உபயோகப்படக்கூடிய பல நூல்கள் அடங்கி யிருக்கின்றன. ஆசிரியர் பெயர்களோடு கிடைக்கு மிடங்களுந் தெரிவித்திருப்பது புத்தகங்களை வாங்க விரும்புகின்றவர்களுக்குப் பெரிதும் பயன்படும். தமிழ் நூல்களில் சிறந்த அறிவும் அனுபவம் உடையவர்களாலேயே இவ்வட்டவணை தொகுக்கப்பட்டிருக்கின்ற தென்பதற்கு ஐயமில்லை. விலை அணா 2. சென்னைத் திருவல்லிக்கேணிப் புஸ்தகாலயப்பிரசார ஆபீஸில் கிடைக்கும்.

மீனாக்ஷிசங்கம்:— கொ. இலக்குமிபுரம் ஸ்ரீ மீனாக்ஷி சங்கத்தின் நான்காவதாண்டு மூன்றாவது திங்கள் கூட்டம். 6-6-29 அன்று பிற்பகல் 4 மணிக்குப் பள்ளத்தூர் திருவாளர் சொ. அ. கதிரேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை சிறந்த உபந்நியாசங்கள் அன்பர்களால் செய்யப்பட்டன. சொ. வி. மாணவர் மாணவிகள் இனியபாக்கள் பாடினார்கள். சபை. 7 மணிக்கு இனிது. நிறைவேறியது எனக் காரியதரிசி எழுதுகின்றார்.

***

மதுவிலக்குக் கூட்டம்·—சென்ற வாரக் கடைசியில் சென்னைக் கடற்கரையில், மதுவிலக்குக் கூட்டமொன்று ஸ்ரீ நாகேச்வரராவ் பந்தலு அவர்கள் தலைமையில் கூடிற்று. ஸ்ரீமான்களான சத்தியமூர்த்தி ஐயர், டாக்டர் நடேசமுதலியார், வி. இரா கோபாலாச்சரியார் முதலிய பலர், மதுவிலக்கின் அவசியத்தை எடுத்துக்கூறி, வாக்காளர் மதுவிலக்குக்காகப்பாடுபவர்களைத்தான் சட்டசபைக்குப் பிரதிநிதிகளாய்த் தெரிந்தெடுக்கவேண்டுமென்றும், அரசாங்க உதவியில்லாது மதுவிலக்க முடியாதென்றும் கூறினர். மது விலக்குத் தீர்மானத்துடன் கூட்டம் கலைந்தது.

***

பிரிட்டிஷ் தேர்தலும் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரும்:—பிரிட்டிஷ் தேர்தலைப்பற்றி ஒரு பத்திரிகை நிருபர் ஸ்ரீ. சேலம். விஜயராகவாச்சாரியாரைக்கண்டு பேசியபொழுது அவர் கூறியதாவது:—இந்தியாவைப்பற்றிய மட்டில் எக்கட்சியினர் அதிகாரத்திலும் பயன் ஒன்றும் ஏற்படாது. தொழிற்கட்சியினில் சிலர் இந்தியாமீது அதிக அபிமானங்கொண்டுள்ளார் என்பது உண்மை. என்றாலும் அவர்களால் எதையும் சாதிக்க முடியாது. முன்னர்த் தொழிற் கட்சியார் அதிகாரம் வகித்தகாலை என்ன செய்து விட்டனர். ஆகவே பிறரை எதிர்பார்ப்பதை விடுத்து, நம்மையே நம்பி வேலை செய்யவேண்டும்.

***

பிரிட்டிஷ் காபினட் சபை :—தொழிற்கட்சியின் தலைவரான மாக்டொனால்டைப் பிரதம மந்திரியாகக் கொண்ட காபினட்சபை அமைக்கப்பட்டது. மற்ற மந்திரிகளின் நியமனம் வருமாறு:—

காப்டன் வெட்ஜிவுட் பென், இந்திய விஷயமான இலாக்காத் தலைவர்.

பிலிப் ஸ்னோடன்—பொக்கிஷ நிர்வாக மந்திரி.

ஆர்தர் ஹெண்டர்ஸன்—அன்னிய நாட்டு இலாக்கா மந்திரி.

ஜெ. எச். தாமஸ்—வேலையில்லாது கஷ்டப்படும் ஜனங்களின் நன்மையைக் கவனிக்கும் இலாக்காவின் மந்திரி.

வெட்னி வெட்—குடியேற்ற நாட்டு விஷயமான நிர்வாக இலாக்கா மந்திரி.

ஸர்.ஜான் லான்கியர்-லார்ட் சான்ஸலர். ஜெ.ஆர். கிளைன்ஸ் - உள்நாட்டு விஷய மந்திரி. லார்ட் தாம்ஸன் - ஆகாயப்படை மந்திரி. டாம். ஷா - யுத்தமந்திரி

ஆர்தர் கிரீன்வுட் - சுகாதார இலாக்கா மந்திரி.

நோயில் பக்ஸ்டன் - விவசாய இலாக்கா மந்திரி.

ஸர். சார்லஸ் டிரிவிலியான் - கல்வி இலாக்காமந்திரி.

விலியம் கிரேஹாம் - கப்பற்படை இலாக்காமந்திரி.

ஜியார்ஜ் லான்ஸ்பரி-மராமத்து இலாக்கா (P. W. D.) மந்திரி

இவர்களே காபினட்டில் முக்கியமானவர்கள். இம்மாதம் 25 ந்தேதி பார்லிமெண்டு சபை திறக்கப்படும் என்றும் அச்சமயம் மேரி மஹாராணி மன்னர்பிரான் பிரசங்கத்தைப் படித்துச் சபையைத் திறந்துவைப்பார் என்றும் தெரிகிறது.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

எம் சொந்தப் பிரசுரங்கள்.

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

கோபால் புதிய தமிழ் வாசகம்.

ஆ. மா. ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

189059

	ரூ.	அ.	பை.
1-ஆம் வகுப்பு	0	2	6
2-ஆம் வகுப்பு	0	3	0
3-ஆம் வகுப்பு	0	4	0
4-ஆம் வகுப்பு	0	4	6
5-ஆம் வகுப்பு	0	6	0
ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது	0	5	0
சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது	0	5	0
கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. நா. கன்னையா எழுதியது	0	5	0
சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயராமய்யர் B.A., L.T., எழுதியது	0	5	0
ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது	0	5	0
தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது	0	4	0
கோபால் வாய்ப்பாடு	0	1	0
புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) ஏ. பரசுராமய்யர் எழுதியது.	0	10	0
கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது	0	8	0
பகீரதன், பண்டிதர் அ. நா. கன்னையா எழுதியது	0	6	0
பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது	0	6	0
சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது	0	12	0
இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது	0	6	0
முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது (அச்சில்)	0	6	0

English publications.

English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T.,	0	12	0
Nanda the Paraiah Saint by. C. S Rangaswami Iyengar B.A., L.T.,	0	3	0
Fables from Mahabharata. by Paramasiva Iyer. B. A., L.T.,	0	3	0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. G. PAUL & Co.,
Publishers
Francis Joseph Street, Madras.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவ மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,
தங்கசாலைவீதி, மதராஸ்.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4

The Educational Publishing Co.,
Nungambakam, Madras.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)